KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 172 குரோதி வருடம், மாசி மாதம் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(18.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 19, 0115 886187 - பக்கங்கள் 12
விலை ரூ.40

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

# பட்ஜெட் 2025

## சபையில் சமர்ப்பித்தார் ஜனாதிபதி



★ வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு முதலீடுகளுக்காக அரச காணிகள் குத்தகைக்கு வழங்கப்படும்.

★ அரச – தனியார் கூட்டாண்மைக்குப் புதிய சட்டம்.

★ தேசிய தர முகாமைத்துவ கட்டமைப்புக்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ கொழும்புத் துறைமுகத்தின் வடக்கு – மேற்கு முனைய அபிவிருத்திகளுக்காக ஒரு மாதத்துக்குள் யோசனைகள் கோரப்படும்.

★ பல்நோக்கு பொருள் விநியோக மத்திய நிலையமாக வெயாங்கொடையில் உள்ளகக் கொள்கலன் முனையம் நிர்மாணிக்கப்படும்.

★ துறைமுக அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ கொழும்புத் துறைமுகம் - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உயர்தர ஸ்கேன் கட்டமைப்பை உருவாக்க 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ இலத்திரனியல் அடையாள அட்டை விரைவில்.

★ இலத்திரனியல் பொருளாதார அதிகாரசபை விரைவில் உருவாக்கப்படும்.

★ கட்டங்கட்டமாக நாணயத்தாள் பாவனையைக் குறைக்கத் திட்டம்.

★ தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடான வருடாந்த ஏற்றுமதி வருமானம். 05 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கப்படும்.

★ டிஜிட்டல் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்ய 3,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ சுற்றுலாத்துறை சார் இடங்களுக்கு புதிய டிஜிட்டல் முறை அறிமுகப்படுத்தப்படும்.

★ ஜப்பான் நிதியுதவியுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டாவது முனையம் விரைவில் நிர்மாணிக்கப்படும்.

★ அரச அபிவிருத்தி வங்கி உருவாக்கப்படும்.

★ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியக் காப்புறுதி இரண்டரை இலட்சம் ரூபாவால் குறைப்பு.

★ எதிர்வரும் மார்ச் மாதம் முதல் சகல அதிசொகுசு வாகனங்களும் குத்தகைக்கு.

★ வறுமையைப் போக்குவதற்கு விசேட வேலைத்திட்டங்கள்.

★ மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ரூபா 7,583 மில்லியன் ஒதுக்கீடு.

★ அரச பணியாளர் அடிப்படைச் சம்பளம் ரூபா 15,750வால் அதிகரிப்பு.

★ பெருந்தோட்டத் தொழிலாளர் நாளாந்த வேதனத்தை ரூபா 1,700 ஆக அதிகரிக்க உறுதி.

★ கலைஞர்கள் / ஊடகவியலாளர்களுக்கு வீடமைப்பு.

★ 05 கைத்தொழில் பூங்காக்கள் அமைக்க ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

★ புதிய தேசிய தீர்வை வரி முறையை அறிமுகப்படுத்தத் திட்டம்.

★ புதிய சுங்கச் சட்டத்தை முன்வைக்க நடவடிக்கை.

» 02 பக்கம்

# அநேகமான பிரதேசங்களில் இன்று வெப்பம் அதிகரிக்கும் அபாயம்

வடக்கு, வட மத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்கள் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் ஒருசில பிரதேசங்களில் இன்று (18) வெப்பநிலை அதிகரித்து காணப்படுமென்றும் மனித உடல் நிலைகளில் நேரடி தாக்கம் ஏற்படுத்துவதற்கான எச்சரிக்கை நிலவுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, திறந்த வெளிகளில் பணியாற்றுபவர்கள் போதியளவு நீர் அருந்துதல், சோர்வு ஏற்படும் நேரங்களில் முடிந்தளவு ஓய்வு பெறுதல் அவசியமெனவும் அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், முதியவர்கள் மற்றும் நோயாளர்கள் தொடர்பில் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும் என்பதுடன் சிறுவர்களை வாகனங்களில் தனித்து விட்டுச் செல்லுதல் கூடாது. நிழலான இடங்களில் ஓய்வெடுத்தல், போதுமானளவு நீர் அருந்துதல், வெள்ளை அல்லது இள நிறம் கொண்ட ஆடைகளை அணிவது அவசியமாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# உள்ளூராட்சி மன்ற அதிகாரசபைகள் தேர்தல்கள் சட்டமூலம்; 187 வாக்குகளுடன் திருத்தங்களின்றி ஏகமனதாக நிறைவேற்றம்

உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 187 வாக்குகளுடன் திருத்தங்கள் ஏதுமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் எவரும் வாக்களிக்கவில்லை.

உள்ளூராட்சி மன்ற அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டமூலத்தை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்திம அபேரத்ன, முதலாம் வாசிப்புக்காக கடந்த ஜனவரி மாதம் 09ஆம் திகதி சபைக்கு சமர்ப்பித்தார் .

குறித்த சில உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் கோரப்பட்டு பிற்போடப்பட்டுள்ளவிடத்து அத்தகைய உள்ளூர் அதிகாரசபைகள் தொடர்பில் புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்காகவும் தேர்தல்களை நடத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தில் முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் நான்கு அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை அறிவிப்பதற்காக பாராளுமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை (14) கூடியது. இதன்போது சபாநாயகர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபைக்கு அறிவித்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் சட்டமூலம் முழுமையாகவும் மற்றும் குறிப்பாக 02 மற்றும் 03ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதியரசர்கள் குழாமில் பெரும்பான்மையினராகிய இரண்டு நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

நீதியரசர் குழாமில் மீதமுள்ள ஒரு நீதியரசர், சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படவில்லையென்பதால் அதனைப் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையொன்றினால் நிறைவேற்ற முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று பி.ப. 02 மணிமுதல் பி.ப 07 மணிவரை நடைபெற்றது. அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ வாக்கெடுப்பு கோரினார். சட்டமூலத்துக்கு ஆதரவாக 187 வாக்குகள் அளிக்கப்பட்டு ஏகமனதாக திருத்தங்களின்றி நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்துக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவரும் வாக்களிக்கவில்லை.

# சட்டத்தரணிகள் சங்கத் தேர்தலுக்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு மனு

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் கோரிக்கை நிராகரிப்பு

ஸ்ரீ லங்கா சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தலுக்காக அதன் தலைவர் பதவிக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தெகொடவினால் அவரின் வேட்புமனு நீக்கி கொள்ளப்பட்டுள்ளமையினால், புதிய வேட்புமனுக்களை கோராமல் தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளதன்படி நாளை 19ஆம் திகதி ஸ்ரீ லங்கா சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தலை நடத்தாமல் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி சட்டத்தரணி லிலந்தி த சில்வாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானவினால் நேற்று (17) நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பை அறிவித்ததை தொடர்ந்து மாவட்ட நீதிபதி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், முன்வைக்கப்பட்ட விடயங்களில் முறைப்பாடு வெற்றியடையக்கூடிய சாதகமான ஆதாரங்கள் உறுதிபடுத்தப்படாமையின் காரணமாக இதற்காக கோரப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவு விதிக்கும் செயற்பாட்டை நிராகரிப்பதாக அறிவித்துள்ளார்.

எது எவ்வாறாக இருந்தாலும் வேறு வழக்குடன் தொடர்புடைய எதிர்ப்புகள் இருக்குமாக இருந்தால் அதுதொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதம் 03 ஆம் திகதி அதனை முன்வைக்குமாறு நீதிபதி மனுதாரர் தரப்புக்கு அறிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவிக்காக வேட்புமனு தாக்கல் செய்த ஜனாதிபதி சட்டத்தரணி மெத்தேகொட அந்த வேட்பு மனுவை நீக்கிக்கொண்டுள்ளதால் புதிதாக வேட்புமனுவுக்கு அழைப்பு விடுத்து பின்னர் தேர்தல் நடத்துமாறு உத்தரவிடுமாறு இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய நீதிமன்றத்தின் முன்னிலையில் கருத்துகளை முன்வைத்தபோது, சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த வேட்பாளர் ஒருவர் தேர்தலுக்கு முன்னர் உயிரிழந்தால் சட்டத்தரணிகள் சங்கத்தின் யாப்பின் பிரகாரம் புதிதாக வேட்புமனு கோரப்பட்டு பின்னர் தேர்தல் நடத்துமாறு குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தேகொ இதுவரையில் தற்போதையளவில் அவரின் வேட்புமனுவை நீக்கிக்கொண்டுள்ளதாகவும் இது வாக்களிக்கவுள்ள சட்டத்தரணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

# யாழ். நூலகத்தை புனரமைக்க பாரிய நிதி ஒதுக்கியுள்ளமை ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் கிடைத்த அபிமானமாகும்

## - கிட்ணன் செல்வராசா எம்.பி. -

''பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் மற்றும் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. யாழ். நூலகத்தை புனரமைப்பதற்கு பாரிய நிதி ஒதுக்கியுள்ளமை ஒட்டுமொத்த தமிழர்களுக்கு கிடைத்த அபிமானமாகும்'' என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கிட்ணன் செல்வராசா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை (17) நடைபெற்ற அமர்வில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைவாழ் ஒட்டுமொத்த மக்களையும் உள்ளடக்கிய வகையில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த கால வரவு - செலவுத் திட்டங்களில் எவ்வாறான முன்மொழிவுகள் காணப்பட்டது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். ஆனால் இம்முறை உழைக்கும் மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் சார்பான வகையில் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். நூலகத்தை புனரமைப்பதற்கு பாரிய நிதி ஒதுக்கியுள்ளமை விசேட அம்சமாகும். இது வடக்கு மக்களுக்கு மாத்திரமல்ல, உலக வாழ் தமிழர்களுக்கும் சிறந்ததொரு அபிமானமாகும்.

பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தோட்ட மக்களின் சம்பள விவகாரம் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. கூட்டு உடன்படிக்கை, நிர்ணய சபை என்று பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தீர்வு கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் பெருந்தோட்ட மக்களுக்கு 1,700ரூபா சம்பளத்தை வழங்குவதற்கான திட்டங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதற்கும் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்குமான திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்வதற்கும் தோட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கும் விசேட திட்டங்களை முன்வைத்துள்ளோம். மக்களுக்கான இந்த வரவு - செலவு திட்டத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவோம் என்றார்.

# பட்ஜெட்...

★ பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனம் இறக்குமதி செய்தல் மற்றும் வாகன இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை.

★ திரிபோஷா வேலைத்திட்டத்துக்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ மகளிர், சிறுவர் துஷ்பிரயோகம், மகளிர் திறன் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்காக 120 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ மகளிர் அபிவிருத்திக்கான கிளைகளை மேம்படுத்த 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலை களுக்காக மனிதவளம், மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் அரசாங்கத்தால் வழங்கப்படும்.

★ சுகாதார சேவைக்காக 604 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பு.

★ லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் நரம்பியல் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக சர்வதேச தரம் கொண்ட சிகிச்சை நிலையமொன்றை அமைக்க 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

★ பாடசாலை உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக 1000 மில்லியன் ரூபா வரையில் நிதி ஒதுக்கீடு.

★ பல்கலைக்கழக கட்டமைப்பு அபிவிருத்திக்காக 135 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ பாலர் பாடசாலை மாணவர்களுக்காக காலை உணவுக்கான வேலைத்திட்டத்துக்கான ஒதுக்கீடு 60 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக அதிகரிப்பு – 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ பாடசாலை கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்து புதிய நிலையை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்துக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான மாணவர் உதவித்தொகை 750 ரூபாவிலிருந்து 1500 ரூபாவாக அதிகரிப்பு - 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ விளையாட்டு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த போசணை கொடுப்பனவு 5000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக அதிகரிப்பு.




» 03 பக்கம்

★ தொழில் பயிற்சி கற்கையில் ஈடுபடும் மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை 4000 ரூபாவிலிருந்து 5000 ரூபாவாக அதிகரிப்பு – 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ பல்கலைக்கழக மாணவர்களுக்கான மககாபொல உதவித் தொகை 5000 ரூபாவிலிருந்து 7500 ரூபாவாக அதிகரிப்பு – பல்கலை மாணவர்களின் மாணவர் உதவி தொகை 4000 ரூபாவிலிருந்து 6500 ரூபாவாக அதிகரிப்பு. (4600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு)

★ உயர்தரப் பரீட்சையின் அதி சித்தியை பெறும் மாணவர்கள் வெளிநாட்டு படிப்பு மற்றும் வினைத்திறன் விருத்தி வேலைத்திட்டத்துக்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ மேல், வடமத்திய, ஊவா, வடக்கு மாகாணங்களில் விசேட விளையாட்டுத் துறை அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

★ யாழ்ப்பாணம் நூலகத்துக்கு தொழில்நுட்பம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு – ஏனைய பகுதிகளிலுள்ள நூலகங்களுக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ திருத்தப்பட்ட புதிய மின்சார சட்டம் விரைவில்.

★ திருகோணமலையிலுள்ள 66 எண்ணெய்த் தாங்கிகளை சர்வதேச நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்யத் திட்டம்.

★ விவசாயிகளுக்கான உர மானியத்துக்கான ஒதுக்கீடு 35,000 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பு.

★ 2024 / 2025ஆம் ஆண்டு பெரும்போக நெல்லை கொள்வனவு செய்ய 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ சோயா, கௌப்பி, பாசிப்பயறு, உளுந்து, மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற தானிய விளைச்சல்களுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ பாவனையின்றி இருக்கும் காணிகளை மீள் அபிவிருத்திக்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளுக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ இராஜாங்கனை, கல்லோயா, மின்னேரியா, உருலுவெவ மீள் அபிவிருத்திக்காக 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ தென்னை பயிர்ச்செய்கை அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ கறுவா உள்ளிட்ட ஏனைய ஏற்றுமதி பயிர்களுக்கான சந்தை அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு 232.5 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பு.

★ சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு 7500 ரூபாவிலிருந்து 10,000 ரூபா வரை அதிகரிப்பு.

★ முதியவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை 3000 ரூபாவிலிருந்து 5000 ரூபா வரையில் அதிகரிப்பு.

★ ஆதரவின்றி இருக்கும் சிறுவர்களுக்கு 5000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்க தீர்மானம். 2000 ரூபாவை அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடவும் தீர்மானம் – இந்த வேலைத்திட்டத்துக்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ ஆதரவின்றி இருக்கும் சிறுவர்கள் திருமணம் செய்யும்போது அவர்களுக்கான வீட்டை நிர்மாணித்துக்கொள்வதற்காக ஒரு மில்லியன் ரூபா வழங்க திட்டம் – 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விலங்குகளினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் உடல் உபாதைகளுக்காக வழங்கப்படும் நிவாரணத் தொகை 10 இலட்சமாக அதிகரிப்பு.

★ புத்தாண்டு காலப்பகுதியில் லங்கா சதொச நிறுவனத்தினூடாக விசேட உணவுப் பொதியை வழங்குவதற்காக 1000 மில்லியன் ரூபா ஒருக்கீடு.

★ சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்பிலுள்ள ஒரு மில்லியன் ரூபாவுக்கு, சந்தையிலுள்ள வட்டி வீதங்களை விட 03 சதவீத வட்டி வீதம் வழங்கத் திட்டம். – ஜூலை முதல் அமுலாகும்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மாசி மாதம் 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** நீங்கள் எதிர்பார்த்த பணம் உங்கள் கையில் கிடைக்கப்போகிறது. காதலியால் அல்லது மனைவியால் இலாபங்கள் உண்டு.

**ரிஷபம்** கல்வியால் சாதனைகள் படைக்கப் போகின்றீர்கள். தாயின் ஆசி உண்டு. நீண்டநாள் வழக்குகள் நிறைவடையப்போகின்றன.

**மிதுனம்** புத்திரர்களின் தேவையற்ற செயற்பாடுகளால் கவலை கொள்வீர்கள். தொழில் துறையில் வீண் குறைகேட்கவேண்டி வரும்.

**கடகம்** தாயால் கவலைகள் ஏற்படலாம். நீங்கள் பயன்படுத்தும் பொருட்கள் உங்கள் கையால் பழுதடையும்.

**சிம்மம்** மனத்துணிவுடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். நணபர்களால் மன நிறைவு கொள்வீர்கள். அதிர்ஷ்டமிக்க நாள்.

**கன்னி** தேவையற்ற பேச்சுகள் வீண் வம்புகளை வளர்த்துக்கொள்வீர்கள். நம்பிக்கைத் துரோகம் ஏற்படலாம். ஏமாற்றத்துக்கு ஆளாவீர்கள்.

**துலாம்** குடும்ப உறவில் மகிழ்ச்சி கூத்தாடும். புகழ், செல்வம், செல்வாக்கு அனைத்தும் சிறப்புறும். தன அதிர்ஷ்டம் உண்டு.

**விருச்சிகம்** தேவையற்ற பயணங்களால் தொல்லைகளைச் சந்திப்பீர்கள். வேலையிடத்தில் அவமானம் ஏற்படலாம். வீண் வம்பு வேண்டாம்.

**தனுசு** மூத்த சகோதரரால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள். அனைத்துவித இலாபங்களையும் பெறுவீர்கள்.

**மகரம்** தொழில் வகையில் நீங்கள் எதிர்பார்த்த வரப்பிரசாதங்களைப் பெறுவீர்கள். குடும்ப உறவுக்காக நேரத்தை ஒதுக்குவீர்கள்.

**கும்பம்** சகோதர வர்க்கத்தார்களுடன் வீண் பிரச்சினைகள் வரலாம். தந்தை யாருடன் விதண்டாவாதம் வேண்டாம்.

**மீனம்** தேவையற்ற மன அழுத்தத்தால் உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்வீர்கள்.எதற்கும் அவசரம் வேண்டாம்.

| | |
|---|---|
| **திதி:** | சஷ்டி முழுவதும் |
| **நட்சத்திரம்:** | சித்திரை மு.ப.7.35 வரை பின் சுவாதி |
| **பிறை:** | தேய்பிறை |
| **யோகம்:** | மரண யோகம் மு.ப.7.35 வரை பின் சித்த யோகம் |
| **வார சூலை:** | வடக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | காலை- 8.26 – 9.26 மணி வரை பகல்- 12.26 – 1.26 மணி வரை மாலை- 4.56 – 6.56 மணி வரை |
| **ராகு காலம்:** | 3.26 – 4.56 மணி வரை |
| **எமகண்டம் :** | 9.26 – 10.56 மணி வரை |
| **குளிகை :** | 12.26 – 1.56 மணி வரை |
| **சந்திராஷ்டமம்:** | மீன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள் இன்று முழுவதும்**

இன்று முற்பகல் 7.35 மணி வரை பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

இன்று முற்பகல் 7.35 மணிக்கு மேல் அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விஷேட தினம்: மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கொடி**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# 2025 வரவு – செலவுத் திட்டத்தில் ரூ. 2,200 பில்லியன் பற்றாக்குறை

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் துண்டும்விழும் தொகையாக 2,200 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நேற்று (17) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான வருமானமாக 4,990 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் செலவுத் தொகையாக 7,190 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, வரவு - செலவுத் திட்டத்தின் துண்டும்விழும் தொகையாக 2,200 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் (வரவு - செலவுத்திட்ட விவாதம்) இன்று (18) முதல் எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

2025 ஜனவரி 09ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு இன்று (18) முதல் 25ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. அத்துடன், பெப்ரவரி 25ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

வரவு - செலவுத்திட்ட காலப்பகுதியில் மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையான காலப் பகுதியில் வரவு - செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும். வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர, ஏனைய அனைத்து நாட்களிலும் பி.ப. 6.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரையான காலப்பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

# நாடு அநுரவுக்கு என்று கூறிவிட்டு ஐ.எம்.எவ். இன் பாதையில் செல்கிறார்கள்

## வரவு - செலவுத் திட்டத்தில் பல்வேறு மாற்றங்களை மேற்கொள்ளவேண்டுமென சஜித் கருத்து

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பல்வேறு திருத்தங்களை மேற்கொண்டு மக்களுக்கு உசிதமானதாக அமைக்கவேண்டும். இருந்தபோதும், நாடு அநுரவுக்கு என்று கூறிவிட்டு நாணய நிதியம் கூறும்படியெல்லாம் நாட்டு நடப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறதென்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவின் பின்னர் நேற்று (17) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ‘வளமான நாடு அழகான வாழ்க்கை’ என்ற கொள்கைப் பிரகடனத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் மாற்றம் செய்யவேண்டிய எத்தனை வாக்குறுதிகளை சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள் என்பது கேள்விக்குரியதாகும்.

பாராளுமன்றத்துக்கு வரும்போது கேக் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதனை மக்களுக்கு சரியாகப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று அமைச்சரொருவர் கூறிக்கொண்டிருந்தார். ஆனால், நாடு அநுரவுக்கு என்ற அவரின் கொடுக்கல் வாங்கலில் மக்களுக்கான பாரிய கேக் ஒன்றை நிர்மாணிக்கப்போவதாகவே வாக்குறுதியளித்தார்கள். ஆனால், இந்த வரவு - செலவுத் திட்டத்தைப் பார்த்தால் நாடு அநுரவுக்கு என்பதற்கு மாறாக நாடு சர்வதேச நாணய நிதியத்துக்கு என்பது போலத் தெரிகிறது.

சர்வதேச நாணய நிதியத்தால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்கமைய உருவாக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டமாகவே இது அமைந்துள்ளது. ஆரம்ப இருப்பை 2.5 ஆக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதேபோன்று, ஆரம்ப செலவு இருப்பை மொத்த தேசிய உற்பத்தியாக 13 ஆக அதிகரிக்க வேண்டும். அரச நிதி முகாமைத்துவ சட்டத்தினூடாக 2024 ஆம் ஆண்டு விடுத்த ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்தவே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மிகவும் வரையறையான வளங்களே முதலீட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. வறுமையை இல்லாமலாக்கக்கூடிய தெளிவான முறையான வேலைத்திட்டங்கள் இந்த வரவு - செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் தொழில் முனைவுக்கு முக்கியத்துவம் வழங்கி வருமானத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை. நாடு அநுரவுக்கு என்ற கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. நாணய நிதியத்தின் செலவு வரையறையின் அடிப்படையில் இது செயற்பட்டுள்ளமையின் காரணமாகவே செலவுகளை மட்டுப்படுத்த நேர்ந்துள்ளது.

# அருந்ததி ஸ்ரீரங்கநாதன் காலமானார்



இலங்கையின் சிரேஷ்ட கலைஞரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவை தமிழ்ப்பிரிவின் பணிப்பாளராகவும் சேவையாற்றிய கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவுஸ்திரேலியாவில் நேற்று (17) காலமானார். இவர் கலாசூரி, தேச நேத்ரு ஆகிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

1946ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி யாழ். கந்தர்மடத்தில் கே.சிவசுப்ரமணியம் திருமதி வீரலட்சுமி தம்பதிக்கு புதல்வியாகப் பிறந்தார்.

இலங்கையிலுள்ள கட்புலக் கலை மற்றும் அரங்கக் கலை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியான ஆலோசகராகவும் தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கு கர்நாடக இசையையும் கற்பித்த இவர் அருஸ்ரீ ஆர்ட் கலையகத்தின் இயக்குனருமாவார்.

வாழ்நாளில் ஒரேயொரு தடவை மாத்திரம் வழங்கப்படும் ‘பிரதிபா பிரணாம’ விருதை வானொலி அரச விருது விழாவில் பெற்றுக் கொண்டார்.

ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக கலைத்துறைக்கு சேவையாற்றிய இவர் ஆயிரக்கணக்கான தமிழ் - சிங்கள மாணவர்களையும் உருவாக்கியுள்ளார். பொருளாதாரவியல் சிறப்பு பட்டதாரியான இவர் சர்வதேச நாடுகளுடனும் தொடர்புகளைப் பேணி வந்தவர். இந்நிலையில், அண்மையில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற நிலையில் தனது 79ஆவது வயதில் நேற்று (17) காலமானார்.

# மாலைதீவு வெளியுறவு அமைச்சர் இன்று இலங்கை வருகை



மாலைதீவு வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீல் இன்று (18) இலங்கைக்கு அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் 21 வரை நாட்டில் தங்கியிருப்பாரெனவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. இந்த விஜயத்தின் போது மாலைதீவு வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை மரியாதை நிமித்தமாகச் சந்திக்கவுள்ளார். மாலைதீவு வெளியுறவு அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்துடன் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகத்தில் அதிகாரபூர்வ இருதரப்புக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்வார்கள்.மாலைதீவு வெளியுறவு அமைச்சர் கலீலுடன் மாலைதீவு வெளியுறவுச் செயலாளர் பாத்திமத் இனயாவும் வருகைதரவுள்ளார்.






தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 பெப்ரவரி, 18ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கும்பமேளாவுக்கான பயணமும் உயிர்களும்!

புதுடில்லி ரயில் நிலையத்தில் சனக்கூட்ட நெரிசலில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் கவலையளிக்கும் செய்தியாக அமைந்துள்ளது. டில்லி ரயில் நிலையத்தில் 13 மற்றும் 14ஆவது நடைமேடைகளில் உள்ள ரயில்களின் தாமதத்தால் சனக்கூட்டம் நிரம்பி வழிந்துள்ளது. கும்பமேளாவுக்குச் செல்லும் பயணிகள் 12ஆவது நடைமேடையில் அளவுக்கதிகமாகக் குவிந்துள்ளனர்.

உத்தரப்பிரதேச பிரயாக்ராஜ் செல்லும் ரயில் 16ஆவது நடைமேடைக்கு வருமென்று கடைசி நேரத்தில் வெளியான அறிவிப்பால் பயணிகள் முண்டியடித்துக்கொண்டு ஏற்கனவே சனக்கூட்டம் நிரம்பி வழிந்துள்ள 13, 14ஆவது நடைமேடைகளைக் கடந்துசென்றபோது பெரும் குழப்பம் ஏற்பட்டு உயிர்ச்சேதத்துக்கு வழிவகுத்துள்ளது.

ரயில்வே நிர்வாகம் அளிக்கும் வசதிக்கும் மக்களின் தேவைக்குமிடையிலுள்ள இடைவெளிதான் இந்தச் சனக்கூட்ட நெரிசல். டில்லி ரயில் நிலையத்தில் அதிகப்படியான மக்கள் குவிந்துள்ளனர். ஒரு மணி நேரத்துக்கு 1,500 முன்பதிவில்லா டிக்கெட்டுகளை கவுன்டர்களில் விநியோகித்துள்ளனர்.

இந்தளவுக்கு டிக்கெட்டுகள் விற்பனையாகும்போதே உயரதிகாரிகள் சுதாரித்துக்கொண்டு மக்களின் தேவைக்கேற்ப ரயில்களின் எண்ணிக்கையை அதிகரித்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. இப்படியொரு அசம்பாவித சம்பவம் நடந்தபிறகு இரவு 10 மணிக்கு மேல் 4 சிறப்பு ரயில்களை பிரயாக்ராஜுக்கு இயக்கி சனக்கூட்டத்தை வெளியேற்றியுள்ளனர். இதை முன்பே செய்திருந்தால், 4 குழந்தைகள் உள்ளிட்ட 18 உயிர்களைப் பலி கொடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

இந்திய அரசும் நிர்வாகமும் அதிகாரிகளும் இன்னும் விழிப்படையவில்லை என்பதையே இதுபோன்ற சம்பவங்கள் உணர்த்துகின்றன. கும்பமேளா நடைபெறும் பிரயாக்ராஜில் ஏற்பட்ட சன நெரிசலில் கடந்த மாதம் 30 பேர் உயிரிழந்தனர். கடந்த ஜுலை மாதம் உத்தரப்பிரதேச மாநிலம் ஹாத்ரஸில் போலே பாபா பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட சனநெரிசலில் 121 பேர் உயிரிழந்தனர். இவை வெறும் எச்சரிக்கை மணி மட்டுமே. இதுபோன்ற சம்பவங்களிலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம் என்பதே இப்போதுள்ள கேள்வி.

மக்கள்தொகை 142 கோடியை எட்டி, உலகின் மிகப்பெரிய சன நெருக்கடியான நாடாக இந்தியா மாறியுள்ளது. அதற்கேற்ப அதன் சிந்தனையும் செயற்பாடுகளும் மாறவேண்டும். 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கட்டமைப்புகள், செயற்பாடுகள் இன்றைய காலகட்டத்துக்குப் பொருந்தாது. நாட்டின் மிகப்பெரும் போக்குவரத்து வசதியாகவுள்ள ரயில்வே நிர்வாகம் மக்கள் தொகை பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் வசதிகளை உருவாக்க வேண்டும்.

மக்களின் தேவைகளுக்கேற்ப ரயில் போக்குவரத்தை அதிகரிக்க வேண்டும். நடைமேடைகள், படிக்கட்டுகள், போக்குவரத்து வசதிகள், அவசரகால வசதிகள், அடிப்படைக் கட்டுமானங்கள் என அனைத்திலும் 142 கோடி எண்ணிக்கையை மனதில் நிலைநிறுத்தி பிரமாண்டமாக உருவாக்க வேண்டும். அதேபோன்று, மக்கள் கூட்டம் எங்கு, எப்படிக் குவியுமென்பது பாதுகாப்புத்துறைக்கு தெரியாததல்ல. முக்கிய நிகழ்வுகளின்போது மக்கள் கூடும் இடங்களில் சனக்கூட்டத்தின் அளவைக் கணித்து, அரசு நிர்வாகத்துடன் இணைந்து சனக்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதும் பாதுகாப்புத்துறையின் கடமை.

பரப்பளவு: 4,000 ஹெக்டேயர், 1,60,000 கூடாரங்கள், 40,000 காவல்துறை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள்,15,000 துப்புரவுப் பணியாளர்கள், அரை மில்லியனுக்கும் அதிகமான வாகனங்களுக்கு 99 வாகன நிறுத்துமிடங்கள், ஆற்றின் மீது 30 மிதக்கும் பாலங்கள், 67,000 தெரு விளக்குகள், 1,50,000 கழிப்பறைகள், 25,000 கழிவுத் தொட்டிகள், 200 தானியங்கி தண்ணீர் குழாய்கள் மற்றும் 85 குழாய்க் கிணறுகள் போன்ற பல்வேறு வசதிகள் இத்திருவிழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு, கும்பமேளாவை நடத்துவதற்கு 280 பில்லியன் ரூபா (812 மில்லியன் டொலர், 665 மில்லியன் யூரோ) செலவழிக்கப்பட்டாலும் மக்களின் உயிர்களைக் காக்கும் வகையிலான ஏற்பாடுகள் இடம்பெறாமை கவலைக்குரியதே.

## இன்றைய நாளில்..

- 1832 – யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல இடங்களில் ஓர் அசாதாரண எரிவெள்ளி தோன்றியது.
- 1911 – முதலாவது அதிகாரபூர்வமான வான்வழிக் கடிதப் போக்குவரத்து இடம்பெற்றது. இதன்போது இந்தியாவின் அலஹாபாத் நகரிலிருந்து 10 கி.மீ. தூரத்திலுள்ள நைனி நகருக்கு 6,500 கடிதங்கள் கொண்டுசெல்லப்பட்டன.
- 1946 – இலங்கையில் ருவான்வெலிசாய தாதுகோபுரத்தில் 2,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த புத்தரின் உருவ ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1948 – இந்திய தேசத்தந்தை மகாத்மா காந்தியின் அஸ்தியின் ஒரு பகுதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க இதனைப் பெற்றுக்கொண்டார்.
- 1959 – நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 2014 – ராஜிவ் காந்தி கொலை வழக்கு: இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைசெய்யப்பட்ட வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக உயர்நீதிமன்றம் குறைத்துத் தீர்ப்பளித்தது.

# 2025 வரவு - செலவுத் திட்டம்

*நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை(17) சமர்ப்பித்தார்.*

*அதற்கமைய, 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் இன்று 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை 22ஆம் திகதி சனிக்கிழமை உள்ளடங்கலாக ஏழு நாட்கள் இடம்பெறவுள்ளது.*

*அத்துடன், பெப்ரவரி 25ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.*

*இதனைத் தொடர்ந்து நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதிவரை 04 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு இடம்பெறும்.*

*இதற்கமைய நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.*

*வரவு - செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி,*

*2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகளை இந்த பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.*



### 01. பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி விரிவாக்கல்

இலங்கையின் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை உலக சந்தைக்கு குறிப்பிட்டதொரு அளவுக்கு அதிகரிக்கும் நோக்கில், அரசாங்கம் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தை (2025-2029) உருவாக்கும். புதிய ஏற்றுமதி சந்தைகளைப் பயன்படுத்த, ஏற்கனவே உள்ள சந்தைகளை விரிவுபடுத்துவதற்கு அல்லது பாரியளவிலான ஏற்றுமதியாளர்களின் பெறுமதிச் சங்கிலி மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைப்பதற்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு வசதி செய்யப்படும்.

உயர்தர, மலிவு விலை மூலப்பொருட்களை அணுகுவதில் உள்ள வரையறைகளை நீக்கும் நோக்கில், தேசிய தீர்வைக் கொள்கை திருத்தப்பட்டு, எளிய, வெளிப்படையான மற்றும் கணிக்கக்கூடிய தீர்வைக் கட்டமைப்பை உருவாக்க, துணை தீர்வைகள் மற்றும் விலக்குகளை படிப்படியாக பகுத்தறிவு செய்வதற்கான கட்டமைப்பைக் கொண்ட ஒரு புதிய தீர்வைக் கொள்கை உருவாக்கப்படும்.

உபாய ரீதியான பங்காளர்களுடன், குறிப்பாக பிராந்திய பொருளாதார பங்குடைமை மற்றும் வேறு உடன்படிக்கைகளினூடாக, ஆசிய நாடுகளுடனான பாரிய பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் வலையமைப்பை விரிவுபடுத்தல் வேண்டும்.


இலங்கையின் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக இலங்கையின் இராஜதந்திரப் பணிகளின் அர்ப்பணிப்பு மற்றும் தொழில்முறை முயற்சிகளுடன் பொருளாதார இராஜதந்திரத்தில் மேம்பட்ட கவனம் செலுத்தப்படும்.

வெளிநாட்டு வியாபார வலையமைப்புகள், வர்த்தக ரீதியான வாய்ப்புகள் மற்றும் இலங்கை ஏற்றுமதியாளர்களுடன் வர்த்தக ரீதியான கூட்டுமுயற்சிகள் என்பவற்றுக்கு அதிகரித்த அணுகலுக்காக வெளிநாட்டு வாழ் இலங்கையரிடம் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வர்த்தகத்துக்கான தேசிய ஒற்றைச் சாளரத்தை (TNSW) செயற்படுத்துவதன் ஊடாக சுங்கம் மற்றும் குடிவரவு குடியகல்வு ஆகிய முக்கிய எல்லை முகவர்களை தானியங்குபடுத்தி ஒருங்கிணைத்தல் மற்றும் ஏற்றுமதியாளர் பதிவை டிஜிட்டல் மயப்படுத்தல்.

வர்த்தக வசதி மற்றும் வருமான சேகரிப்பை மேம்படுத்துவதற்கு புதிய சுங்க கட்டளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

அதிக வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுடன் கூடிய நாடுகளுக்கு முன்னுரிமையளித்து, ஏற்கனவே காணப்படுகின்ற 44 இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களுக்கு அப்பால் இலங்கையின் இரட்டை வரி விதிப்பனவு மற்றும் வரி ஏய்ப்பு ஒப்பந்தங்கள் விரிவுபடுத்தப்படும்.




### 02. முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வசதியளிப்பு

ஏற்றுமதி சார்ந்த முதலீடுகள் மற்றும் துறை சார்ந்த வலயங்களை விரிவுபடுத்துதல். நிலையான நடைமுறைகள், வள முகாமைத்துவம் மற்றும் பசுமை தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தும் சுற்றுச்சூழல்-தொழிற்றுறை பூங்காக்களை நிறுவுவதற்கு அரச தனியார் பங்களிப்புகள் (PPPs) மற்றும் தனியாரினால் நடத்தப்படும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் மூலம் முன்னுரிமை அளிக்கப்படும்.

பொருளாதார உருமாற்ற சட்டத்தை மாறிவரும் முன்னேற்றங்களுக்கு பொருந்தும் வகையில் உரிய திருத்தங்களுடன் மீளாய்வு செய்யும்.

அரசாங்கம் பயன்படுத்தாத அரசுக்கு சொந்தமான காணிகள் உற்பத்தி பொருளாதார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்படும்.

வளர்ந்து வரும் அபிவிருத்திக்கேற்ப பொருத்தமான திருத்தங்களுடன் பொருளாதார கொடுக்கல் வாங்கல் சட்டம் மீண்டும் திருத்தம் செய்யப்படும்.

முதலீடுகளை பாதுகாப்பதற்காக பிரத்தியேகமான முதலீட்டுப் பாதுகாப்பு சட்டமூலமொன்று இயற்றப்படும்.

ஆதனங்களை பதிவுசெய்தல், வரிக் கொடுப்பனவுகளை எளிமைப்படுத்தல், வர்த்தக வசதிப்படுத்தல், ஒப்பந்தங்களை அமுல்படுத்தல், கடன் பெற்றுக்கொள்ளல் போன்ற முக்கிய துறைகளில் நாட்டின் இலகுவான வியாபார மேம்படுத்தல்கள். அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான வழிமுறைகள் இக்குறிக்கோளை இயலச்செய்வதில் முக்கிய பங்காற்றும்.

அரச தனியார் பங்குடைமைக்கான சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படும்.

சிறியளவிலான நில உரிமையாளர்களுக்கு சிறந்த தரமான நில உரித்தை உருவாக்குவதற்கும் நிலத்தின் வணிகப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் 'பிம்சவிய' நிகழ்ச்சித்திட்டம் விரைவுபடுத்தப்படும்.

ஏற்கனவே வரைவு நிலையிலுள்ள புதிய கடனிறுக்க வகையற்றல் சட்டம் விரைவுபடுத்தப்படும்.

இலங்கையின் கனிம வளங்கள் மற்றும் கடல்சார் பொருளாதாரத்தின் முதலீடு, தொழிற்றுறை அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிகளில் இலங்கையின் பயன்படுத்தப்படாத திறனை மேம்படுத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு அரசாங்கம் அழைப்புவிடுக்கும்.

ஏற்றுமதியாளர்கள் தரப் பரிசோதனை மற்றும் சான்றிதழ்களைப் பெறுவதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை அரசாங்கம் வழங்கும்.

வாடிக்கையாளர்களுக்கு திறமையான சேவை வழங்குவதற்காக, பரிசோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள், பரிந்துரை நிலையங்கள், புற்றுநோய் கண்டறிதல் மற்றும் துல்லிய சுகாதார ஆராய்ச்சிக்கான பரிந்துரை நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்றுறை தொழில்நுட்ப நிறுவனம் உள்ளிட்ட பிற இணக்க மதிப்பீட்டு அமைப்புகளும் பயனுள்ள ஒருங்கிணைப்பு பொறிமுறையுடன் உருவாக்கப்படும். நாட்டில் தேசிய தர நிர்ணய உட்கட்டமைப்பு (NQI) முறைமையின் விரும்பிய விளைவை நிறைவேற்றுவதற்காக, ஆரம்ப விரிவான மதிப்பீட்டுடன், 2025 ஆம் ஆண்டுக்கு ரூபா 750 மில்லியனை ஒதுக்க நாம் முன்மொழிகிறோம்.

### 03. இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்திலிருந்து அனுகூலமடைதல்

இலங்கையானது வர்த்தகம், தளவாடங்கள், நிதி சேவைகள் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கான மையமாக மாறுகின்ற ஆற்றலைக் கொண்டுள்ளது. இந்த ஆற்றலை நிறைவேற்றுவதற்கான அடிப்படை ஏற்பாடுகளை இந்த வரவு-செலவுத்திட்டம் வழங்கும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முதன்மையானதாக சரக்கு போக்குவரத்துத்துறை குறிப்பிடத்தக்க ஆற்றலைக் கொண்டுள்ளது. இது நாட்டின் மூலோபாய புவியியல் இடவமைவைப் பயன்படுத்துகிறது. தற்போது, சரக்கு போக்குவரத்துத் துறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 2.5% பங்களிப்பதுடன், தேசிய ஏற்றுமதிகளில் 07% பங்களிக்கிறது. அத்துடன், 40,000 – 50,000 பேருக்கு நேரடி முழுநேர வேலைவாய்ப்பை வழங்குகிறது.

கிழக்கு மற்றும் மேற்கு கொள்கலன் முனையத் திட்டங்கள் நிறைவடைந்தவுடன், கொழும்பு துறைமுகத்தின் ஆற்றல் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும். இதற்கு மேலதிகமாக, முன்மொழியப்பட்ட கொழும்பு வடக்கு துறைமுகம் இலங்கையின் துறைமுகங்களின் செயற்றிறனை விரைவுபடுத்தும் என்றும் நாட்டை உலகளாவிய சரக்கு போக்குவரத்து மையமாக மேலும் நிலைநிறுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான விருப்பங்கள் ஒரு மாதத்துக்குள் கோரப்படும்.

கொழும்பு துறைமுகத்தில் கையாளப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கையானது துரிதமாக அதிகரித்து வருவதனால் அது மோசமான நெரிசலை அனுபவிக்கின்றது. இந் நிலைமையானது உட்கட்டமைப்பு, முறைமைகள் மற்றும் நடைமுறைகளில் முக்கியமான மாற்றங்களை வேண்டி நிற்கின்றது.

எனவே, கெரவலப்பிட்டி சுங்க கண்காணிப்பு நிலையம் மற்றும் புளூமெண்டல் சரக்கு போக்குவரத்துப் பூங்கா காணி கையகப்படுத்தச் செயன்முறை மற்றும் ஆரம்ப ஆயத்த பணிகளுக்கு ஆதரிப்பதற்காக 2025 வரவு - செலவுத்திட்டத்திலிருந்து ரூபா 500 மில்லியனை ஒதுக்க நான் முன்மொழிகிறேன்.

கொழும்பு துறைமுகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொள்கலன் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் பெறுமதி சேர்ப்பு மூலம் வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கும் நீண்டகால நடவடிக்கையாக, வெயாங்கொடையில் ரயில் அடிப்படையிலான ஒருங்கிணைந்த பல்மாதிரி சரக்கு மற்றும் சரக்குப் போக்குவரத்து மையமாக (Intergrated Multimodel Cargo & Logistic Center) உள்ளக கொள்கலன் உலர் துறைமுகமொன்றை (Internal Container Dry Port) நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. முந்தைய ஆய்வுகளை மீளாய்வு செய்வதற்கும் நிறுவன பொறிமுறையை அடையாளம் காண்பதற்கும் காணி கையகப்படுத்தல் செயன்முறை மற்றும் வெயாங்கொடையில் உள்ளக கொள்கலன் உலர் துறைமுகத்துக்கான ஆரம்பப் பணிகளுக்கு ஒத்துழைப்பதற்கும் ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடுசெய்ய நான் முன்மொழிகிறேன்.

தேசிய ஒற்றை சாளர அமைப்பு, ட்ரக் நியமன முறைமை, இலத்திரனியல் சரக்கு கண்காணிப்பு முறைமை மற்றும் துறைமுக சமுதாய முறைமை ஆகியவற்றைச் செயற்படுத்தவும் ஆரம்ப அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கவும் ரூபா 500 மில்லியனை ஒதுக்க நான் முன்மொழிகிறேன்.

சரக்கு போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு உட்கட்டமைப்பை நவீனமயமாக்குவதும் அதிநவீன தொழில்நுட்பத்தை இணைப்பதும் மிக முக்கியமாகும். காலாவதியான ஸ்கேனிங் அமைப்புகள் முழு விநியோகச் சங்கிலியிலும் தாமதத்துக்கு காரணமாகின்றன.

எனவே, கொழும்பு துறைமுகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கான மேம்பட்ட ஸ்கேனிங் முறைமையின் ஆரம்ப அபிவிருத்தி மற்றும் அவற்றை நிறுவுவதை ஒத்துழைப்பதற்காக ரூபா 1,000 மில்லியனை ஒதுக்க நான் முன்மொழிகிறேன்.

### 04. டிஜிட்டல் பொருளாதார முன்னேற்றம்

இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவது எமது பொருளாதார அபிவிருத்தி உபாயத் திட்டத்தின் மிக முக்கியமான தூண்களில் ஒன்றாகும். டிஜிட்டல் மாற்றம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், பொருளாதார வாய்ப்பை அதிகரித்தல், பொது சேவை வழங்கலை மேம்படுத்துதல் மற்றும் ஆளுகை மற்றும் அரச நிதியில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.

அனைத்து பிரஜைகளுக்கும் இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாளத்தை (SL-UDI) அறிமுகப்படுத்துதல் என்பது, டிஜிட்டல் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு அவசியமான ஒரு அடிப்படை டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு ஆகும். இந்த செயன்முறையை நோக்கிய நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள அதேவேளையில், இந்தச் செயல்முறை துரிதப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரம், புதிய சட்டங்களை உருவாக்குவதன் மூலமும் ஏற்கனவே உள்ள சட்டங்களை வலுப்படுத்துவதன் மூலமும் ஆளப்பட்டு பாதுகாக்கப்படும். தொடர்புடைய நிறுவன வரைசட்டகத்தை வலுப்படுத்துவதிலும் நாங்கள் கவனம் செலுத்துவோம். டிஜிட்டல் பொருளாதாரத்தை மேலும் துரிதப்படுத்துவதற்கும் ஒரு உச்ச டிஜிட்டல் பொருளாதார அதிகாரசபை மற்றும் டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள பிற குறிப்பிட்ட நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும் புதிய சட்டவாக்கங்களை இயற்றுவோம். இணையப் பாதுகாப்பு, தரவு தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு தொடர்பான சட்டவாக்கத்தையும் நிறுவனங்களையும் நாங்கள் வலுப்படுத்துவோம்.

அரசாங்கம், வணிகம் மற்றும் மக்கள் ஆகியவற்றுக்கு இடையே பாயும் டிஜிட்டல் கொடுப்பனவுகளை விரைவாக ஏற்றுக்கொள்வது டிஜிட்டல் பொருளாதாரத்தின் முக்கிய முடுக்கியாக இருக்கும். சமீபத்தில் தொடங்கப்பட்ட GovPay அமைப்பு அத்தகைய டிஜிட்டல் கொடுப்பனவு வழிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். காசு அடிப்படையிலான பொருளாதார மாதிரியிலிருந்து படிப்படியாக மாறுவது அவசியமானதாகும். இது தெளிவாக அறிவுறுத்தப்பட்டு கட்டம் கட்டமாக செயற்படுத்தப்படும்.

அடுத்த 05 ஆண்டுகளில் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை ஐ.அ.டொலர் 15 பில்லியன் அல்லது தேசிய பொருளாதாரத்தில் 12% க்கும் அதிகமான நிலைக்கு வளர்ப்பதே எங்கள் நோக்கமாகும். இந்த இலட்சியத்தை அடைவதில், தகவல் தொழில்நுட்பத் துறையின் வருடாந்த ஏற்றுமதி வருமானத்தை ஐ.அ.டொலர் 05 பில்லியன் அதிகரிப்பதற்கு அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது.

அதன்படி, விவரிக்கப்பட்டுள்ள முன்னெடுப்புகள் மூலம் டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தியின் விரைவுபடுத்தலை வலுப்படுத்துவதற்கு ரூபா 3,000 மில்லியனை ஒதுக்க நாங்கள் முன்மொழிகிறோம்.

### 05. சுற்றுலாத்துறை

ஒவ்வொரு இடத்திலிருந்தும் மதிப்பு உருவாக்கத்தை மேம்படுத்தும் வகையில், உள்ளூர் இடங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் அந்த இடத்தின் தனித்துவமான கலாசார மதிப்பு முன்மொழிவை தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் பிரதிபலிக்கும் வகையில் உள்ளூர் வியாபார நாமத்துடன் சுற்றுலாத் துறையில் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அடையாளம் காணப்பட்ட பிறகு, தேவையான முக்கியமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் 02 ஆண்டு காலமான 2025-2026 இல் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

(05ஆம் பக்கம் பார்க்க)

# 2025 வரவு - செலவுத் திட்டம்

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி , வளர்ந்த இடங்களுக்கான ஒருங்கிணைந்த நகர வர்த்தக நாமம் மற்றும் ஊக்குவிப்பு பிரசாரத்தால் ஆதரிக்கப்படும். இதற்காக, 2025 ஆம் ஆண்டுக்கு ரூபா 500 மில்லியன் ஒதுக்க நாங்கள் முன்மொழிகிறோம்.

சுற்றுலாத்துறையில் இளைஞர்களுக்கு தகவல் தொடர்பு மற்றும் பிற திறன்களில் பயிற்சி அளிக்க அரசாங்கம் உதவி வழங்கும்.

சுற்றுலாப் பயணிகளின் இடமாற்றத் திறனை விரிவுபடுத்துவதற்காக புதிய சுற்றுலாத் தலங்களை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்.

இதற்கு இணையாக, அதிக சன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் துறையின் திறனை மேம்படுத்துவதற்கும் டிஜிட்டல் டிக்கெட் முறை அறிமுகப்படுத்தப்படும்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய முனையம் 02 ஜப்பானிய முதலீடுகளின் ஒத்துழைப்புடன் விரிவுபடுத்தப்படும்.

சுற்றுலாப் பயணிகள், சுற்றுலா பொலிஸ், அரச நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளை இணைத்து, சுற்றுலாத் தலங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல், பாதுகாப்பு எச்சரிக்கைகள், சுற்றுலா அனுபவங்கள் குறித்த கருத்துகளைப் பெறுதல் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு வழங்கப்படும் முறைப்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளின் கலவையின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் விருந்தோம்பலை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளும்.

**06. பொருளாதார அபிவிருத்தியின் முதுகெலும்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி**

இந்நாட்டின் நிதியியல் கலாசாரமானது பிணையுறுதி அடிப்படையில் அமைந்த கடன் வழங்கலாக இருந்து வருகின்றது. இது பாரிய நிதியியல் ஓரங்கட்டப்படுதலுக்கு வழிவகுத்துள்ளது. வங்கிகள் வைப்பாளர்களின் நலன்களை பாதுகாப்பதுடன் அவற்றின் கடன் வழங்கல் நடைமுறைகளில் முன்மாதிரியை உறுதிசெய்கின்ற அதேவேளை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் புதிய தொழில்முயற்சியாளர்களுக்கும் தீர்வொன்று இருக்கின்ற தேவையும் காணப்படுகின்றது.

இந்நோக்கில் அரசாங்கமானது அபிவிருத்தி வங்கியொன்றை உருவாக்குவதை நோக்கிய தெரிவுகளை ஆராய்கின்றது. முதற்படியாக ஏற்கனவே காணப்படுகின்ற அரச வங்கி பொறிமுறையூடாக பொருத்தமான நிர்வாக கட்டமைப்பொன்றின் ஊடாக அபிவிருத்தி வங்கியின் தொழிற்பாடு ஸ்தாபிக்கப்படவுள்ளது. அரசாங்கம் இச்செயன்முறைக்கு தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனம் (NCGI) ஆதரவளிக்கும்.

**07. புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு என்பவற்றைப் பேணி வளர்த்தல்**

ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், தேசிய புலமைச் சொத்து அமைப்பு (NIPO) உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்தும் ஆலோசனை பெற்றும் தொழிற்றுறை தேவைகளுக்கேற்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்படும்.

***ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளுக்கான முன்னுரிமை பின்வருமாறு அமையும்:-***

தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு இணை நிதியுதவி வழங்குதல்.

பொது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் தொடர்புடையவற்றுக்கு இடையேயான இணைப்புகளை ஒருங்கிணைத்தல்.

மாட்ரிட் நெறிமுறையை அணுகுவதன் மூலம் ஏற்றுமதியாளர்கள் உலகளவில் வர்த்தக முத்திரை பாதுகாப்பைப் பெற உதவுதல்.

ஆராய்ச்சிகள் முடிவுகளை வர்த்தக மயப்படுத்துவதற்காக புதுமை நிதி ஒன்றினை உருவாக்குவதற்கு ரூபா 1,000 மில்லியன் ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

**08. செலவின முகாமைத்துவம்**

அரச தலைமைத்துவமானது செலவு முகாமைத்துவத்துக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் பங்காற்றுகின்றது என்பதை காட்டுவதற்கு உதாரணமாக அமைச்சரவையானது 24 அமைச்சுகளுடன் 21 அமைச்சர்களினால் நிர்வகிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான வதிவிடங்கள் என்ற பெயரில் ஒதுக்கப்பட்டிருந்த மாளிகைகள் திறன்மிக்க பொதுப் பாவனைகளுக்காக பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சொத்துகளை பொது மக்கள் நலன்கள் மற்றும் பொருளாதார ரீதியான சாத்தியமான கருத்திட்டங்களில் பயன்படுத்துவதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதிகூடிய செயற்பாடு மற்றும் பராமரிப்புச் செலவுகளைக் கொண்ட அனைத்து சொகுசு வாகனங்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***வாகனம் தொடர்பான அரச செலவினங்களைக் குறைத்தல்***

அரச அதிகாரிகள் தனது தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் அரச வாகனங்கள் மீதான செலவைக் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

***அரச நிறுவனங்களை மீளாய்வு செய்தல்***

அரசாங்க நிறுவனங்களின் பணிகள் மற்றும் பயன்பாட்டை மீளாய்வதற்கு ஏற்கனவே குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எவ்வகையான நிறுவனங்கள் தொடர்ந்தும் இயங்க வேண்டும், எவை ஏனைய நிறுவனங்களுடன் ஒன்று சேர்க்கப்பட வேண்டும், எவை மூடப்படல் வேண்டும் என்பதை தீர்மானிக்க முடியும். பொதுச் சேவைகளை வழங்குவதிலும் வரிசெலுத்துநர்களின் நிதிகளை சேமிப்பதிலும் மேம்பட்ட வினைத்திறனை இச்செயற்பாடு ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

***அரச தொழில் முயற்சிகளின் நிர்வாக ஆளுகை***

தெரிவுசெய்யப்பட்ட அரச தொழில்முயற்சிகளின் சொத்தாண்மையை கொண்டிருக்கக் கூடிய அரச முழுக் கட்டுப்பாட்டின் கீழான ஒரு உரித்துக் கம்பனியொன்று உருவாக்கப்பட்டு, ஆளுகை, நிதிஒழுக்கம் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன் மேம்படுத்தப்படும். சிறந்த நிறுவன ஆளுகை நடைமுறையின்கீழ் நிறுவன நோக்கக் கூற்றைக் கடைப்பிடித்து அரச தொழில்முயற்சிகள் தொழிற்படுகின்றதா என்பதை இக்கட்டமைப்பு உறுதி செய்கின்றது. இந்நிறுவன நோக்குக்கூற்று ஊடாக அரச தொழில் முயற்சிகளின் எதிர்பார்க்கப்பட்ட வகிபாகம் மற்றும் பெறுபேறுகளை வரைவிலக்கணம் செய்யலாம். இது அரச தொழில்முயற்சியானது மக்களின் நலன்களுக்காகவே இயங்குகின்றது என்பதை உறுதி செய்யும்.

**09. மகளிரின் பொருளாதார பங்களிப்புக்கு ஒத்துழைத்தல்**

மகளிர் விவகாரங்களுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித் திட்டங்களானது நிரல் அமைச்சு அதேபோல் மாகாண சபைகளின் கீழ் அமுல்படுத்தப்படும். கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவைப் பெற்றுக்கொடுப்பதற்காக மாதாந்த உதவித்தொகை பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதற்காக ரூபா 7,500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான திரிபோஷா சத்துணவு திட்டத்துக்காக ரூபா 5,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறையை தடுத்தல், பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களை பாதுகாத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 120 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. நாடுபூராகவும் வியாபித்துள்ள வலையமைப்பினூடாக பெண்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூபா 720 மில்லியன் செலவு செய்யப்படும்.

**10. ஒரு ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி**

***i.சுகாதார முறைமையின் டிஜிட்டல் மயமாக்கல்***

பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் சுகாதார முறைமையில் டிஜிட்டல் மயமாக்கல் மிகக் குறைவாகவே உள்ளது. அதன்படி, சுகாதாரப் பராமரிப்பு விநியோகத்தை டிஜிட்டல் மயமாக்குவதை மேம்படுத்துவதற்கு 2025 முதல் புதிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். இதில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துகை அதிகாரசபை, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் 'ஸ்வஸ்தா' முறைமை மேம்பாடு மற்றும் விரிவாக்கல் ஆகியன அடங்கும்.

***ii.கிராமிய மட்ட ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்துதல்***

தொற்றா நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, 1,000க்கும் மேற்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகள் மற்றும் பிரதேச வைத்தியசாலைகளின் சேவை வழங்கலை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளில், குறிப்பாக வயதான மக்களை இலக்காகக் கொண்டு, நோய்த்தடுப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு சேவைகள் கிடைக்கும்.

***iii.பெருந்தோட்டச் சுகாதார சேவைகள்***

பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுடன் பொது தனியார் கூட்டாண்மை (PPP) மூலம் தோட்ட மட்டத்திலான சுகாதார சேவையை வலுப்படுத்தும் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். தோட்ட வைத்தியசாலைகளுக்குத் தேவையான மனித வளங்கள், தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அரசாங்கத்தால் வழங்கப்படும்.

***iv.தொற்றுநோய் தயார்நிலை***

அடுத்த மூன்று வருடங்களில் அபிவிருத்தி பங்காளிகளின் உதவியுடன் தொற்றுநோய் தடுப்பு, தயார்நிலை மற்றும் எதிர்வினைக்கான தேசிய திறன் மேம்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, அனைத்து சாத்தியமான சுகாதார அபாயங்களுக்கும் எதிரான கண்காணிப்பு மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை திறன் பலப்படுத்தப்படும்.

***v.ஆட்டிசம் உள்ளிட்ட நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடுள்ள சிறுவர்களுக்கான சுகாதார சிகிச்சையை வழங்குதல்***

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் ஆட்டிசம் உட்பட நரம்பியல் வளர்ச்சி குறைபாடுள்ள சிறுவர்களுக்கான சுகாதாரம், கல்வி மற்றும் சேவை வசதிகளை மேம்படுத்துவதற்கான 05 ஆண்டு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் நரம்பியல் வளர்ச்சி குறைபாடுள்ள சிறுவர்களுக்கான சிகிச்சை நிலையத்தை சர்வதேச தரங்களுடன் நிறுவுவதற்கு 2025இல் ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடுசெய்ய நான் முன்மொழிகிறேன். மேலும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் தேவையான மனித வளங்களுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதேபோன்ற சிகிச்சை நிலையங்களை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

***vi.ஆட்டிசம் உள்ளிட்ட நரம்பியல் வளர்ச்சி குறைபாடுள்ள சிறுவர்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி***

கல்வி மற்றும் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி குறித்து பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களிடையே விழிப்புணர்வு மற்றும் போதிய திறன் காணப்படாமையே இதற்கு முக்கிய காரணமாகும். இந்த நோக்கத்துக்காக, மாதிரி பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றை உருவாக்குவதற்காக ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடுசெய்ய நாம் முன்மொழிகிறோம்.

**11. அனைவருக்கும் கல்வி வாய்ப்புகள்**

பாடசாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 2025 வரவு-செலவுத் திட்டத்தில் ரூபா 2,500 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களின் தரத்தை மேம்படுத்த ஏற்கனவே ரூபா 137,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



***முன்பள்ளி சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டம்***

முன்பள்ளி சிறார்களுக்கான காலை உணவு நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் ஒருவருக்கு பெற்றுக் கொடுக்கப்படும் உணவுக்கான கட்டணத்தை ரூபா 60 இலிருந்து ரூபா 100 ஆக அதிகரிக்க நான் முன்மொழிகிறேன். மேலும், இதற்காக 2025 வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளில் ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது.

வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அடித்தளத்தை அமைத்து மாதிரி ஆரம்ப குழந்தைப் பருவக் கல்வி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு 2025 வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளில் ரூபா 120 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த கொடுப்பனவை இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் ரூபா 1000 இனால் அதிகரிக்க முன்மொழிகிறோம். இதன்படி 100 மில்லியன் ரூபாவை இதற்காக ஒதுக்கீடு செய்ய முன்மொழிகிறோம்

***பாடசாலைக் கல்வியை நவீனமயமாக்கல்***

பாடசாலைகளை இடமாற்ற ஒரு தேசிய திட்டத்தை தயாரிப்பதற்காக பாடசாலை முறைமையை மீளாய்வு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. இதன்படி ரூபா 500 மில்லியனை இதற்காக ஒதுக்கீடு செய்ய முன்மொழிகிறோம்

***மாணவர் புலமைப்பரிசில்***

**அ.** குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில் தொகையை ரூபா 750 லிருந்து ரூபா 1,500 ஆக அதிகரிக்க நான் முன்மொழிகிறேன். இதற்காக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கப்படுகின்றது.

**ஆ.**விளையாட்டு பாடசாலை மாணவர்கள் போஷாக்கான உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு போஷாக்கு உணவு கொடுப்பனவானது அதிகரித்துள்ளது. மாதாந்த போஷாக்கு உணவு கொடுப்பனவை, ரூபா 5,000 இலிருந்து ரூபா 10,000 வரை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். இதற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கமானது ஏற்கனவே வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**இ.**தொழிற்பயிற்சி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற கொடுப்பனவை ரூபா 4,000 இலிருந்து ரூபா 5,000 வரை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். இதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒதுக்கத்துக்கு மேலதிகமாக ரூபா 200 மில்லியன் வழங்குவதற்கு முன்மொழிகிறேன்.

**ஈ.**மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை ரூபா 5,000 இலிருந்து ரூபா 7,500 ஆக அதிகரிக்கவும் மற்றும் மாதாந்த உதவித் தொகையை ரூபா 4,000 இலிருந்து ரூபா 6,500 ஆக அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகிறேன். இதற்காக, 2025 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏற்கனவே ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வனைத்து கொடுப்பனவுகளும் 2025 ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும்.

***உயர்நிலைப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கான உதவித்தொகை.***

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டமொன்றை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகிறேன். 2025 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு ரூபா 200 மில்லியன் ஒதுக்க முன்மொழிகிறேன்.

***விளையாட்டுப் பாடசாலைகளின் அபிவிருத்தி***

இது சம்பந்தமாக, மேற்கு, வடக்கு, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய ஆகிய ஐந்து மாகாணங்களில் சிறப்பு விளையாட்டுப் பாடசாலைகளை உருவாக்க நான் முன்மொழிகிறேன். இப்பாடசாலைகளானது தெரிவு செய்யப்படும்போது அப்பாடசாலைகளின் மாணவர்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகளில் கடந்த காலம் அல்லது நிகழ்காலத்தில் சாதித்த சாதனைகளின் அடிப்படையில் பாடசாலைகள் தெரிவுசெய்யப்படும். அதன்படி, ஐந்து மாகாணங்களில் விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்திசெய்வதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடுசெய்ய நான் முன்மொழிகிறேன்.

***யாழ்ப்பாண நூலகம் மற்றும் ஏனைய பிராந்திய நூலகங்களின் மேம்பாடு***

யாழ்ப்பாண நூலகத்தின் உட்கட்டமைப்பு போதுமானளவு மேம்படுத்தப்படவில்லை. எனவே, இந்த நூலகத்துக்கு கணினிகள் மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை வழங்க இந்த வரவு-செலவுத்திட்டத்தில் ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். மேலும் ஏனைய பிராந்திய நூலகங்களின் அபிவிருத்திக்காக இவ் வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் இன்னும் ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்ய முன்மொழிகிறேன்.

**12. வலுசக்தித் துறை**

மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் கவனம் செலுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் என்பவற்றுக்கு கூடுதல் நிறை அளிக்கப்பட்டு வலுசக்தி மூலங்களை பல்வகைப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களில் சிறந்த கட்டண நன்மையை நாட்டுக்கு அளிக்கக்கூடியவர்களை வரவேற்பதோடு அரசாங்கமானது வலுசக்தித் துறையில் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொள்ளும். உள்ளக மீள்கட்டமைத்தலுக்கு வசதியளிக்கும் வகையில் ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகத்துக்கு அவசியமான மறுசீராக்கங்களை முன்னுரிமைப்படுத்தி புதிய சட்டமானது விரைவில் பூரணப்படுத்தப்படும்.

கைத்தொழில் மற்றும் ஏற்றுமதித்துறைக்கு போட்டித்தன்மையான வலுசக்தியைப் பெற்றுக்கொடுப்பதற்காக குறைந்த கட்டணத்தில் வலுசக்தியை பெற்றுக்கொடுத்தலின் அடிப்படையில் வலுசக்தி துறைக்கான முதலீடுகள் வரவேற்கப்படும். இதன்போது கம்பனி அல்லது நாட்டின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படமாட்டாது.

இதனூடாக 2030இல் 70 சதவீதமாக மீள் புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றலை அடைந்து கொள்வதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். கேள்வி முகாமைத்துவம் காலநிலை மாற்றத்துக்கான பாரிஸ் உடன்படிக்கைக்கு ஒத்ததாக கேள்விப்பக்க முகாமைத்துவத்தினூடாக வலுசக்தி வினைத்திறனூடாக இவ்விலக்கு அடையப்படும்.

மேலும், திருகோணமலை எண்ணெய்க் குதம் பகுதியானது ஒவ்வொன்றும் 10,000 மெற்றிக் தொன் கொள்வனவு கொண்ட 99 குதங்களைக் கொண்டதாகும். CPC மற்றும் IOC இனைத் தவிர்த்து 61 குதங்கள் உள்ளன.

இக்குதங்களின் உபாயமான அமைவிடம் காரணமாக அதிக சாத்தியவளத்தைக் கொண்டுள்ளன. எனவே சர்வதேச நிறுவனங்களின் கூட்டிணைவில் அவை அபிவிருத்தி செய்யப்படும்.

**13. விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு**

பெரும்பான்மையான இலங்கையர்களின் பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு விவசாயத்துறையின் சாத்தியங்களை மேம்படுத்துவது முக்கியமானதொரு தேவையாகும்.

நெல் விவசாயிகளுக்கான உரமானியம் தொடர்ந்து வழங்கப்படும். இதற்காக அரசாங்கம் ஏற்கனவே 2025ஆம் ஆண்டுக்கு ரூபா 34,000 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. தரமான விதைகள் அபிவிருத்தி, நீர்ப்பாசன வடிகாலமைப்பு முறைமையை முகாமை செய்தல், விவசாயத்தில் வினைத்திறனான நீர்ப்பாவனை என்பன முன்னுரிமை விடயங்களாக அடையாளம் காணப்பட்டு வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகளால் வசதியளிக்கப்படும்.

***ஆரோக்கியமான நெல் இருப்பைப் பராமரித்தல் :***

சந்தையில் அரிசியின் கேள்வியை மற்றும் நிரம்பல் இடைவெளியை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, சீரற்ற விலை ஏற்றத்தாழ்வை தவிர்ப்பதற்கு ஒரு மீள் நடவடிக்கையாக, இந்த 2024/25 பெரும்போகத்திலிருந்து ஒரு போதுமான ஆரோக்கியமான நெல் இருப்பை பராமரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந் நோக்கத்துக்காக ரூபா 5,000 மில்லியன் ஒதுக்கீடு.

***தகவல் முறைமை :*** உற்பத்தி தளத்தில் இருந்து நுகர்வோர் வரை முழு பெறுமதிச் சங்கிலியையும் உள்ளடக்கிய ஒரு சரியான தரவு மற்றும் தகவல் அமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். "உணவுப் பாதுகாப்பு வாழ்வாதார அவசர உதவித் கருத்திட்டம்" மூலம் உதவி வழங்கப்படும். மேலும், ஒருங்கிணைந்த கிராம – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்தன்மை என்ற உலக வங்கியின் புதிய கருத்திட்டத்தின் நிதி மூலம் விரிவாக்கப்படும்.

***பிற களப் பயிர்களின் உற்பத்தி அதிகரிப்பு:*** நெல் உற்பத்திக்கு மேலதிகமாக பாசிப்பயறு, உளுந்து, மிளகாய், சிவப்பு வெங்காயம், கௌபி, சோயா, சோளம், உருளைக்கிழங்கு மற்றும் பிற தெரிவுசெய்யப்பட்ட தானியங்கள் மற்றும் கிழங்கு பயிர்களின் உற்பத்தி 2025-27 ஆம் ஆண்டு நடுத்தர காலத்தில் துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்படும். இதற்காக, 2025 இல் ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். மேலதிகமாக, விவசாய அமைச்சுக்கு நிதி வழங்கப்படும்

சந்தையில் அரிசியின் இருப்பு மற்றும் நெல் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தலை ஒழுங்குபடுத்தும் முகமாக ஒழுங்குபடுத்தல் வேலைச்சட்டகமொன்றை அபிவிருத்தி செய்வது பொருத்தமானதாகும். அதன்படி, நெற் சந்தைப்படுத்தல் சட்டமானது திருத்தப்பட்டு நெல் மற்றும் அரிசி சேகரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தலை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

***நிலத்தை உற்பத்திக்குப் பயன்படுத்தல்***

தற்போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற்றால் நிர்வகிக்கப்பட்டு உற்பத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாத நிலங்கள் அடையாளம் காணப்பட்டு நிலத்தின் பொருத்தப்பாட்டை கருத்தில் கொண்டு விவசாய உற்பத்தி மற்றும் விவசாய அடிப்படையான அல்லது விவசாயம் அல்லா சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக தனியார்துறையின் முதலீட்டுக்காக விடுவிக்கப்படும். இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு.

***இளம் தொழில்முனைவோர் மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவுகள்***

கூட்டுறவு பொறிமுறையானது அபிவிருத்தி செய்யப்பட்டு மாற்று உற்பத்தி அணுகுமுறையொன்றை பின்பற்றுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

அரசாங்கமானது அவசியமான காணிகள், விவசாய விரிவாக்கல் சேவைகள் மற்றும் ஏனைய ஆதரவுகளைப் பெற்றுக்கொடுத்து கூட்டுறவுத்துறைக்கு ஆதரவளிக்கும். சட்ட வலுவூட்டலை மேலும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி ரீதியான ஊக்குவிப்புகளை பெற்றுக்கொடுப்பதற்குமாக 2025 இல் இம்முன்முயற்சிகளுக்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு.

(08ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவது ஜனநாயகப் பிரஜைகளின் கடமை; ஆட்சியாளர்களிடம் பொலிஸார் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்

## தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவிப்பு

*(வீரமுனை செய்தியாளர்)*

''எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவதுதான் ஜனநாயக பிரஜைகளின் கடமை என்பதை தற்போதைய ஆட்சியாளர்களிடம் பொலிஸார் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்'' என ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அப்படியான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியவர்களே இன்று ஆட்சியாளர்களாகவும் வந்துள்ளார்கள் என்பதை நேற்று (17) நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலகத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாவட்ட செயலகத்தை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, அது தொடர்பான வழக்குகள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நடைபெற்றுவந்தன.

இது தொடர்பான வழக்கு நேற்று (17) மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி த.தர்சினியினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிராளிகளின் சார்பில் எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

இந்த நிலையில் வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சமர்ப்பணங்களை முன்வைத்த நிலையில், இந்த வழக்கின் இறுதித்தினமாக ஜூன் 09ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

கச்சேரிக்கு செல்லுகின்ற வழிப்பாதையை மறித்தார்கள் என்கின்ற குற்றச்சாட்டை முன்வைத்து எங்களுடைய கட்சியின் உறுப்பினர்கள் பலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் ஒரு சில மாதங்களுக்கு பின்னர் இந்த வழக்கு நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நானும் சக சட்டத்தரணிகளும் ஆஜராகி இது எந்த அடிப்படைகளும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தோம்.

இது தொடர்பான புலனாய்வாளர்களின் அறிக்கைகள் தேவைப்படுகின்றன. அவற்றை புலனாய்வு செய்வதற்கு தங்களுக்கு அவகாசம் தேவை என்று பொலிஸார் தெரிவிக்க, அவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டது.

ஆனால் இப்பொழுது ஏறக்குறைய மூன்று வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் கூட இன்னமும் எதுவிதமான குற்றச்சாட்டும் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்படவில்லை. சென்ற வாரத்திலும் இந்த வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தபோதும் ஜூன் மாதம் 09ஆம் திகதிக்கு மீண்டும் திகதியிடப்பட்டுள்ளது.

இது அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிப்பது பிரஜைகளின் கடமை என உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளை கூறியிருக்கின்றது. அவ்வாறிருக்கையில், எந்தவித அடிப்படையும் இல்லாமல் வெறுமனே இவர்களை அலைக்கழிப்பதற்காக இந்த வழக்கு இவ்வளவு காலமும் கொண்டு செல்லப்பட்டு கொண்டிருக்கின்றது.



15 நாட்கள் தான் சட்டத்தில் இந்த விசாரணைகள் நடத்துவதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 15 நாட்களில் முடியாவிட்டால் இன்னும் ஒரு 15 நாட்கள் கொடுக்க முடியும் எனவும் இருக்கின்றது. அவ்வாறு 30 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டிய விடயத்தை மூன்று வருடங்களாக இழுத்தடிப்பது என்பது சட்டம் கண்டுகொள்ள முடியாத ஒரு விடயம். அதற்கு மேல் அதிகமாக அவர்கள் நீதிமன்றத்துக்கு சொல்லுகின்ற விடயம் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பது. அது சம்பந்தமாக பல உயர் நீதிமன்ற தீர்ப்புகள் இருக்கின்றன. அதனையும் நான் மன்றுக்கு கூறியிருக்கின்றேன்.

இறுதித் தினமாக இல்லாததன் காரணத்தினால் அவ்வாறான சமர்ப்பணத்தை அடுத்த தவணையில் சமர்ப்பிப்பேன். அவ்வாறாக எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் தான் இன்று ஆட்சியாளர்களாகவும் வந்திருக்கிறார்கள் என்பதனை மன்றிலே கூறியிருக்கின்றேன்.

இன்றைக்கு ஆட்சியில் இருக்கின்றவர்களிடத்திலாவது கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இவ்வாறு எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்துவது தான் ஜனநாயகப் பிரஜைகளின் கடமை. அவ்வாறு செய்தால் அதற்கு உதவ வேண்டும் என்றுதான் பல நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன.

பொலிஸார் அவர்களுக்கு இடையூறு செய்யாமல் இருப்பது மாத்திரமல்ல அவர்கள் அவ்வாறான போராட்டங்கள் நடத்துவதற்கு உடந்தையாகவும் உதவியாகவும் இருக்க வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

ஆகையினால் வெறுமனே வேற்று கட்சி என்பதன் காரணத்தினாலே பழி தீர்க்கும் நோக்கோடு இவர்களை இழுத்தடிப்பதற்காக இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணத்தை எடுத்துக் கூறி இருக்கின்றேன். இறுதித்தினமாக ஜூன் 09 தவணையிடப்பட்டுள்ளது.

காணி அபகரிப்பு சம்பந்தமாக புதிதாக ஆட்சியில் வந்தவர்களுக்கு முதல் தடவை எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்தபோது விபரமாக அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு கூறி இருக்கின்றார்கள். அதற்கு தாங்கள் இந்த விடயத்தை கையாளுவதாகவும் அதற்கு சற்று காலம் தர வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்கள்.

அந்த கால அவகாசம் இப்பொழுது முடிவடைந்திருக்கின்றது என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. ஆகையினால் அரசாங்கம் இது சம்பந்தமான விடயங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் பின்னணியில் நாங்கள் தொடர்ச்சியாக வெகு விரைவில் மக்கள் போராட்டங்களை நடத்த திட்டமிட்டிருக்கின்றோம். ஆகையினால் இந்த விடயங்கள் சம்பந்தமாக மிகவும் முக்கியமாக, நில அபகரிப்பு விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் வெகு விரைவில் மக்கள் போராட்டங்களை நடத்துவோம் - என்றார்.

# தலவாக்கலையில் ஒரே நாளில் 08 கால்நடைகள் திடீரென உயிரிழப்பு

*(தலவாக்கலை நிருபர்)*

தலவாக்கலை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை, ஹொலிரூட் ரத்னீகல தோட்டத்தில் அமைந்துள்ள வீடொன்றின் 08 ஆடுகளும் நாய் ஒன்றும் உயிரிழந்துள்ளமை அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.





வீட்டிலுள்ள ஆட்டுத் தொழுவத்தில் 12 ஆடுகள் காணப்பட்ட நிலையில், காலை தொழுவத்திலுள்ள ஆடுகளுக்கு உணவு கொடுக்கச் சென்ற வேளையில் ஒரே நேரத்தில் 08 ஆடுகளும் காவலுக்கு இருந்த நாயும் இறந்து கிடந்துள்ளது. இது இப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் வீட்டுக்காரர்களினால் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருவதோடு, கால்நடைகளின் பிரேத பரிசோதனைக்காக தலவாக்கலை கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு இறந்த ஆடுகள் மற்றும் நாயின் உடல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# வட்டுவாகல் பாலத்துக்கு ரூ. ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு; நீண்டகால பிரச்சினையை தீர்த்துவைத்ததில் மகிழ்ச்சி

## ரவிகரன் எம்.பி.

*(விஜயரத்தினம் சரவணன்)*

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணியை ஆரம்பிப்பதற்கு 2025 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத்திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமது அயராத தொடர் முயற்சியால் முல்லைத்தீவு மக்களின் நீண்டகால பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுத்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது தொடர்ச்சியான கோரிக்கையை ஏற்று வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணத்துக்கான நிதியை இவ்வருட வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கியதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் விமல் ரத்நாயக்கவுக்கும் கூட்டுறவுப் பிரதி அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான உபாலி சமரசிங்க ஆகியோருக்கு முல்லைத்தீவு மக்களின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

குறிப்பாக, முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் அமைக்கப்படவேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த நிலையில், கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் தொடர்பான விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த வட்டுவாகல் பாலம் அமைக்கப்பட வேண்டுமென கூட்டுறவுப் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் வலியுறுத்தியதுடன், குறித்த கூட்டத்தின் பின்னர் பிரதிஅமைச்சர் மற்றும் சகபாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், அனைவரையும் நேரடியாக வட்டுவாகல் பாலம் அமைந்துள்ள பகுதிக்கு அழைத்துச்சென்று மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து இடர்பாடுகள் குறித்தும் நேரடியாகக் காண்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் தனது பாராளுமன்ற முதல் உரையில் வட்டுவாகல் பாலம் அமைக்கப்படவேண்டும் என வலியுறுத்தியதுடன், அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இதன்போது வட்டுவாகல் பாலம் அமைப்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுமென ஜனாதிபதியும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் 22ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் அமைச்சர் விமல் ரத்நாயக்கவுடன் இடம்பெற்ற சந்திப்பில் வட்டுவாகல் பாலம் அமைப்பதற்கு 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுமென உறுதியளித்திருந்தார்.

இத்தகைய சூழலிலேயே நேற்று ஜனாதிபதி வரவு-செலவுத்திட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கும்போது வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படுவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோதுமை மாவின் விலை குறைப்பு

பிறீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் இன்று (18) முதல் கோதுமை மாவின் விலையைக் குறைக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

இதன்படி, ஒரு கிலோ பிறீமா மற்றும் செரண்டிப் கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கோதுமை மாவின் விலை குறைப்பினால் பேக்கரி உணவு பொருட்களின் விலை குறைக்கப்படும் என தான் நம்புவதாக செரண்டிப் மா ஆலையின் நிர்வாகி கலிங்க விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு, சதொச நிறுவனத்தில் அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Month | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Month | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Month | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Month | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209


# மேன்முறையீட்டு நீதியரசர் மொஹமட் லபார் தாஹிரின் பதவிக்காலம் நீடிப்பு



பதில் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரான நீதியரசர் மொஹமட் லபார் தாஹிரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் மொஹமட் லபார் தாஹிர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முன்னிலையில் நேற்று (17) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.

# பேராதனைப் பல்கலையில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்





*(எம்.ஏ.அமீனுல்லா)*

அரசாங்கத்தின் தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்துடன் இணைந்து, பேராதனை பல்கலைக்கழக வளாகத்தை 'கிளீன் பேரா' (PERA CLEAN) எனும் தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் 86/87 கலைப்பீட பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு, நாட்டின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான கேந்திர மையம் ஆகியவற்றால் கிளீன் பேரா என்ற பெயரில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள அரச நிறுவன ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மாணவர் சங்கம், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட சுற்றுவட்டார அரச நிறுவனங்கள், பேராதனை தாவரவியல் பூங்கா ஊழியர்கள், இலங்கை பொலிஸ் திணைக்களம், கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலர் இந்த திட்டத்தில் இணைந்துகொண்டனர்.

# மட்டு. இராமகிருஷ்ணமிஷனின் நூற்றாண்டுத் தொடக்க விழா







(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனின் நூற்றாண்டுத் தொடக்க விழாவை முன்னிட்டு சிறப்புப் பொது நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (16) கல்லடி, உப்போடை விபுலானந்த மணிமண்டபத்தில் இடம்பெற்றன.

இலங்கை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தாஜீ மஹராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் வரவேற்புரை நிகழ்த்த இந்தியா காசி இராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜீ மஹராஜ் வாழ்த்துரையையும் உலகளாவிய ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் துணைத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜீ மஹராஜ் ஆசியுரையையும் ஆற்றினர்.

இதன்போது சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறு, திருமூலர் வாழ்க்கையும் செய்தியும் மற்றும் பஜனாவளி ஆகிய நூல்களின் வெளியீடு இடம்பெற்றது. இந்நூல்களின் அறிமுகவுரையை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் திருமதி புளோரன்ஸ் பாரதி கென்னடி நிகழ்த்தினார்.

இதன்போது மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் நூற்றாண்டு தொடக்கவிழா பெயர்ப் பலகை ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜீ மஹராஜால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டதுடன் இந்நிகழ்வுகளில் பங்கேற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஆன்மீகத் துறவிகள், முன்னாள் அரசாங்க அதிபர்களான திருமதி கலாமதி பத்மராஜா, கணபதிப்பிள்ளை கருணாகரன், கே.விமலநாதன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா, முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# போதைப்பொருள் தடுப்புத் திட்டத்தை மட்டக்களப்பில் அமுல்படுத்த ஏற்பாடு





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு (மனோஹரி) உளநல சமூக நிகழ்ச்சித் திட்டத்தை இவ் வருடமும் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ பீட பழைய மாணவர்கள் அமைப்பின் ஒருங்கிணைந்த நிதியுதவித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இந்த மனோஹரி உளநல சமூக நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அண்மையில்(14) இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மனோஹரி நிகழ்ச்சித் திட்டத்தின் 2024 இல் அடைந்த முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் எவற்றை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட பழைய மாணவர்கள் ஒன்றியத் தலைவர் வைத்தியர் நவநீதன் தெளிவுபடுத்தினார்.

இந்த மனோஹரி உளநல சமூக நிகழ்ச்சித் திட்டம் 2023 மார்ச் மாதத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் கீழ் பிரச்சினைகளுடனான இளைஞர்களுக்கான நடக்கும் நிலையம் (walking Centre), ஆசிரியர் பயிற்சி நிலையம் (Teacher Training Centre), பெற்றோருக்கான திறன் பயிற்சி ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன. கடந்த காலங்களில் இத்திட்டத்தை அமுல்படுத்தியபோது வகுப்புகளுக்கு ஆசிரியர் ஒதுக்கீடு, மாதாந்தம் பயிற்சிகளுக்காக ஆசிரியர்களை விடுவித்தல், அதிபர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களின் பங்களிப்பு என்பன தொடர்பான சிக்கல்கள் காணப்பட்டதாகக் கலந்துரையாடலில் குறிப்பிடப் பட்டது.

இத்திட்டத்தினூடாக பாடசாலை விலகல் குறைவடைந்ததுடன், கல்வி மட்ட அதிகரிப்பை அடையக்கூடியதாக இருந்தது. மேலும், ஒழுக்கம் மற்றும் சிறந்த மனப்பாங்குடைய சிறுவர் சமுதாயமொன்றையும் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைப்பதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி முரளீஸ்வரன், மாவட்ட சிறுவர் உளநல வைத்திய அதிகாரி டான் சௌந்தரராஜா உட்பட மாவட்ட செயலக அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







மட்டக்களப்பு, பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக் கழகத்தின் 18ஆவது ஆண்டு நிறைவு விழா கழகத் தலைவர் அகிலன் தலைமையில் பெரியகல்லாறு கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டார். இதன்போது கழக ரீதியில் விளையாட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, 2024ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரத்தில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்றவர்கள், பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியோர் எனப் பலரும் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (குருக்கள்மடம் செய்தியாளர்)

# பெரியநீலாவணையில் அமைந்துள்ள இரு மதுபானசாலைகளும் அகற்றப்பட வேண்டும்

## அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

(எருவில் செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தின் வடக்கு எல்லையில் உள்ள பெரியநீலாவணையில் இயங்கிவரும் இரண்டு மதுபானசாலைகளையும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி உடன் அகற்ற வேண்டுமென்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இந்நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தம் காரணமாகவும் சுனாமி பேரழிவு காரணமாகவும் கிழக்கு மாகாணத்தில் அதிகளவான உயிரிழப்புகளையும் சொத்திழப்புகளையும் சந்தித்த கிராமமாக பெரியநீலாவணை கிராமம் உள்ளமை கண்கூடு. குறித்த மதுபானசாலைகள் இரண்டும் இந்து ஆலயம், கிறிஸ்தவ தேவாலயம், சரஸ்வதி வித்தியாலயம், பெரியநீலாவணை வைத்தியசாலை என்பவற்றுக்கு அருகிலுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறான சூழலில் மனக்காயங்களுடன் வாழும் மக்களிடையே பொருளாதார வளங்களைச் சூறையாடும் மூட்டைப் பூச்சியாக இந்த மதுபானசாலைகள் உள்ளன. இதன் காரணமாக குடும்ப வன்முறைகள், பெண்களுக்கெதிரான வன்முறைகள், தற்கொலைகள், கலாசாரச் சீர்கேடுகள், சமூகப் பிணக்குகள், வீதி விபத்துகள் என விரும்பத்தகாத விடயங்கள் நாளுக்கு நாள் அரங்கேறி இம் மக்களின் வாழ்வியலை குட்டிச்சுவராக்கியுள்ளன.

இத்தகைய விரும்பத்தகாத செயற்பாடானது பெரியநீலாவணைக் கிராமத்தில் மட்டுமன்றி, இக் கிராமத்தின் அருகிலுள்ள துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு, பாண்டிருப்பு, துரைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை போன்ற ஊர்களிலும் நன்கு ஊடுருவியுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். மேற்கூறிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இந்த மதுபானசாலைகள் இயக்கமுறுவதால் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும் குடும்ப வன்முறைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். இன்னும் சில மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் துன்பியல் சம்பவங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

இதேவேளை, இந்த விடயத்தை தமக்கு சாதகமாக்கி ஒருசில அரசியல்வாதிகள் தமது நாடகங்களை அரங்கேற்றி அரசியல் வியாபாரமும் விபசாரமும் செய்ய முனைவதையும் அனுமதிக்க முடியாது. எனவே, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அதிகளவான மக்கள் தொகையைக் கொண்ட பெரியநீலாவணைக் கிராம மக்கள் மட்டுமன்றி, அயல் கிராம மக்களும் நிம்மதிப் பெருமூச்சு விட்டு உளக் காயங்களின்றி வாழும் சூழலை உருவாக்கும் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து ஜனாதிபதி பொது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பெரியநீலாவணையில் உள்ள இரண்டு மதுபானசாலைகளையும் அகற்றி எமது மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

# முஜிபுர் ரஹ்மான் எம்.பி. – ஐக்கிய மக்கள் சக்தி அம்பாறை அமைப்பாளர்கள் கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானுக்கும் இடையிலான கலந்துரையாடல் அம்பாறை தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை(16) இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது, தேர்தலுக்கான வியூகம், வேட்பாளர்கள் தெரிவு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ். அப்துல் றசாக் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் ஹசன் அலி உட்பட பொத்துவில் தொகுதி அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாண சாதனை கைப்பணியாளர்களுக்கு விருது விழா





(சீனக்குடா செய்தியாளர்)

2024ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் சாதனை படைத்த கைப்பணியாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (17) திருகோணமலை உப்புவெளி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கிராமியத் தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் நா. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய மற்றும் மாகாண மட்ட 'சில்ப அபிமானி' தேசிய அருங்கலைகள், தேசிய கைத்தறிப் புடவைத் தயாரிப்புப் போட்டி மற்றும் நெசவு வாரம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற 12 உற்பத்தியாளர்களும் மாகாண மட்டத்தில் சாதனை படைத்த 170 உற்பத்தியாளர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் பைசல் ஆப்தீன் கலந்துகொண்டதோடு, சிறப்பு அதிதிகளாக மாகாண சபை செயலகச் செயலாளர்கள், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாணத் திணைக்களத் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினர்.

# கல்முனை வலயத்தில் இடைவிலகிய மாணவர்களை உள்ளீர்க்க நடவடிக்கை

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பாடசாலைகளில் இடைவிலகிய மாணவர்களை உள்ளீர்க்கும் பணியை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.சஹ்துல் நஜீம் மேற்கொண்டுள்ளார். இதனடிப்படையில் கடந்தாண்டு 154 மாணவர்களும் இவ்வாண்டில் 12 மாணவர்களும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளதாக முறைசாராக்கல்வி ஆசிரிய ஆலோசகர் முஹம்மத் றாசீக் தெரிவித்தார்.

இந்தப் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கிராம சேவகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார் உள்ளிட்டோர் தேவையான உதவிகளை வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, 2026ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தம் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், இடைவிலகிய மாணவர்கள் உள்ளீர்க்கப்படுதல் அவசிய தேவையாக இருப்பதையும் குறிப்பிட்ட அவர், வெளிவாரி மதிப்பீடு, தனிப்பட்ட பாடசாலை விஜயம், கோட்ட மட்ட மதிப்பீடுகளில் முறைசாராக்கல்வி விடயத்தில் அதிக கவனஞ்செலுத்திவருவதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக, கடற்கரைப் பிரதேசங்களில் அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களே இடைவிலகலில் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் கூறினார்.





கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கரையோரப் பகுதிகளை சுத்தம் செய்யும் நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரி தினேஷ் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(16) நடைபெற்றது. (மட்டக்களப்பு)

# 2025 வரவு - செலவுத் திட்டம்

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

*விவசாயத்தில் இளம் தொழில்முனைவோர் அபிவிருத்தி*

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் இளம் தொழில்முனைவாளர்களை குறிப்பாக தொடக்கநிலை நிறுவனங்களில் ஈடுபட விரும்பும் விரிவாக்கத்தை எதிர்பார்க்கும் இளைஞர் தொழில்முனைவோர் இந்த முன்மொழியப்பட்ட முயற்சிகளின் இலக்காக இருப்பார்கள். இதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

*பாற்பொருள் உற்பத்தி அபிவிருத்தி*

பால் பெறுமதி சங்கிலியை மேம்படுத்தி, தற்போது அமுல்படுத்தப்படுகின்ற உள்ளடக்கிய இணைப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தின் மூலம் பாற்பண்ணை உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு 2025-2026 ஆண்டு காலப்பகுதியில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ரூபா 2,500 மில்லியன் முதலீடு.

*நீர்ப்பாசனத் துறை அபிவிருத்தி*

இலங்கையானது விவசாய அடிப்படைப் பொருளாதார நாடாக இருப்பதால், சனத்தொகையில் 75% மானோர் கிராமப்புறத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். 2025 இல் நீர்ப்பாசனத் துறை அபிவிருத்திக்கான மொத்த முதலீடு ரூபா 74,500 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கல் ஓயா திட்டம், இராஜாங்கனை, மின்னேரியா மற்றும் ஹுருலுவெவ திட்டங்களின் கீழ்நிலை நீர் விநியோக கால்வாய்களை மறுசீரமைக்கவும் ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீடு.

**14. பெருந்தோட்டங்கள் மற்றும் ஏற்றுமதி பயிர்கள் தெங்கு உற்பத்திகளை அதிகரித்தல்**

2030 இல் நாட்டின் மொத்த தேவை 4,500 மில்லியன் தேங்காய்களாக இருக்கும். அதில் வீட்டு நுகர்வுக்கு 1,800 மில்லியன் தேங்காய்களும் மீதமுள்ள 2,700 மில்லியன் தேங்காய்கள் தொழிற்றுறை நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படும்.

உற்பத்தியை அதிகரிப்பதற்கான நீண்டகால நடவடிக்கையாக அதிக விளைச்சல் தென்னை நாற்றுகள் மற்றும் நில அபிவிருத்திக்காக ரூபா 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

**பிற ஏற்றுமதி பயிர்கள் – வாசனைத் திரவியங்கள்**

கறுவா போன்ற மரபுரீதியான ஏற்றுமதிகளின் பெறுமதிச்சேர்க்கைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இலங்கை தூதரகங்களினூடாக இப் பொருட்களின் சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல்கள் மேம்படுத்தப்படும். அரசாங்கமானது விவசாய உற்பத்திகளின் வழங்கல் தரத்தை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொடுப்பதோடு விவசாயிகளை பெறுமதி  சேர்ப்பு ஏற்றுமதியாளர்களுடன் தொடர்புபடுத்துவதற்கான வசதிகளை செய்து கொடுக்கின்றது.

உலகளாவிய பெறுமதிச் சங்கிலியை இணைக்கும் வகையில், இலங்கை கறுவா மற்றும் பிற ஏற்றுமதிப் பயிர்கள் மீதான ஒருங்கிணைந்த தயாரிப்பு அபிவிருத்தி மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை செயற்படுத்த ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு.

**15. கடற்றொழில் துறை – நீருயிரின வளர்ப்பு**

அரச தனியார் பங்குடைமை (PPP) ஏற்பாடுகள், சாத்தியமான விவசாய கூட்டுறவுகள் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்புகளின் கீழ் நன்னீர் இறால் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுவதற்கும் விவசாய சங்கங்கள் அத்தகைய சந்தைப்படுத்தல் வலையமைப்புகளுடன் இணைவதற்கு வசதி செய்வதற்கும் நான் முன்மொழிகிறேன். இதற்காக, ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு.

**16. சமூகப் பாதுகாப்பு 'அஸ்வெசும' நலன்களை அதிகரித்தல்**

வலுவிழந்த சமூகங்களின் சுமையைக் குறைக்க, சமூகப் பதிவேட்டில் உள்ளவர்களுக்கு காசு மானியங்களை அதிகரிப்பதன் மூலம் அவர்களைப் பாதுகாக்க அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி, அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு நிகர செலவினத்தை 2025 இல் ரூபா 232.5 பில்லியனாக உயர்த்தியுள்ளது.

*சிறுநீரக நோயாளிகள்/ விசேட தேவையுடையோர்/ முதியோர் கொடுப்பவை அதிகரித்தல்*

சிறுநீரக நோயாளிகள் மற்றும் விசேட தேவையுடையோருக்கான மாதாந்த கொடுப்பனவுகளை ரூபா 7,500 லிருந்து ரூபா 10,000 ஆகவும் முதியோருக்கான மாதாந்த கொடுப்பனவுகளை ரூபா 3,000 லிருந்து ரூபா 5,000 ஆகவும் 2025 ஏப்ரல் முதல் அதிகரிக்க நான் முன்மொழிகிறேன்.

*நிலையான மாற்றத்துக்காக அஸ்வெசும பயனாளிகளை வலுவூட்டுதல்*

அரசாங்கக் கொள்கையின்படி, அரசாங்க நிதி மற்றும் வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி 1.2 மில்லியன் அஸ்வெசும பயனாளிகள் வலுவூட்டப்படுவார்கள். இதனடிப்படையில் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்துக்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தியை மேம்படுத்தி சிறுவர் பராமரிப்பு மையங்களின் திறனை மேம்படுத்துவதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக 2025ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கு ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு.

i.நிறுவகப்படுத்தப்பட்ட சிறுவர்கள் மற்றும் அநாதைகளுக்கு ரூபா 5,000 மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும். இதில் ரூபா 2,000 சிறுவரின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுவதோடு மிகுதி ரூபா 3,000 ஆனது சிறார்களின் செலவுகளுக்காக அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் அவர்களின் சட்டப்படியான பாதுகாவலருக்கு பெற்றுக் கொடுக்கப்படும். இதற்காக 2025 வரவு-செலவுத் திட்டத்தில் ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு.

ii.இதற்கு மேலதிகமாக இவர்களில் பெரும்பாலானவர்கள் வீடு மற்றும் பாதுகாப்புடன் தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு  உதவி செய்யக் கூடிய குடும்ப பின்புலம் அல்லது ஆதரவு முறைமையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கான நிலையான வீட்டைக் கட்டிக்கொள்வதற்கு ஒரு மில்லியன் ரூபா வீட்டு மானியம் பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழிகிறேன். இதை அமுல்படுத்துவதற்கு 2025 வரவு-செலவுத்திட்டத்தில் அரசாங்கமானது ரூபா 1000 மில்லியன் ஒதுக்கீடு.

*மாற்றுத்திறனாளிகள் பற்றிய தரவுத்தளம்*

2025 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துடன் இணைந்து மாற்றுத் திறனாளிகளுக்கான செயலகத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் பற்றிய விரிவான தரவுத்தளத்தை நிறுவ ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு.

**18. சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட வட்டி**

சிரேஷ்ட பிரஜைகளுக்கு 03 சதவீத மேலதிக மானிய வட்டியைப் பெற்றுக்கொடுத்து இத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரூபா 15,000 மில்லியன் ஒதுக்கீடு.

**19. போதைப்பொருளற்ற சமூகத்தை உருவாக்குதல்**

விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகள், உளநல ஆலோசனைகளுடன் புனர்வாழ்வளித்தல் சமூக வலுவூட்டல் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கி ஒரு முழுமையான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதற்கு முன்மொழிவு. அதன்படி இம்முழுமையான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி போதைப்பொருளிலிருந்து விடுதலை பெற்ற சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

**20. தண்டனைக் கைதிகளுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

ஏறக்குறைய 65 சதவீதமான சிறைக்கைதிகள் 40 வயதுக்குட்பட்ட தங்களது வேலை செய்யும் வயதில் உச்சத்தில் உள்ளனர்.

ஆகவே, தொழில்வாய்ப்பு மற்றும் சந்தைக் கேள்வியுள்ள திறன் அபிவிருத்தி பயிற்சி நெறிகளை தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து நடத்துவதற்கும் மற்றும் உரிய தொழிற்றகைமைச் சான்றிதழ்களை  பெற்றுக்கொடுப்பதற்கும் முன்மொழிவு.  இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே இருக்கும் ஒதுக்கத்தை 100 மில்லியன் ரூபாவால் அதிகரிக்க முன்மொழிவு.

வரும் களனி வெளி ரயில் பாதையை கட்டம் கட்டமாக அவிசாவளைக்கு அப்பால் நீடிப்பதற்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பிப்பதற்கு 2025 வரவு-செலவுத் திட்டத்தில் ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு.

*விவசாய உற்பத்திகளுக்கான ரயில் போக்குவரத்து*


வீதி வலையமைப்பு வழியாக விவசாயப் பொருட்களை கொண்டு செல்வது பாரிய சவாலாகவே காணப்படுகிறது. இதை நிவர்த்திசெய்ய, உற்பத்தி மையங்களிலிருந்து விவசாயப் பொருட்களை ரயில் மூலம் கொண்டு செல்வதற்கான பிரத்தியேக போக்குவரத்தை அறிமுகப்படுத்த முன்மொழிகிறேன்.

தம்புத்தேகம ரயில் நிலையத்தை களஞ்சிய வசதிகளுடன் பொருட்களை கையாடல் தளங்களையும் இணைத்து அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம். இந்த முன்னெடுப்புக்கு ஒத்துழைக்கும் வகையில், ஆரம்ப கட்டமாக சாத்தியவள ஆய்வை முன்னெடுப்பதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு.

*ஸ்ரீலங்கன் விமான சேவையின் கடனுக்கான தீர்வு*

ஸ்ரீலங்கன் விமான சேவையானது கடன்பெற்றுள்ள வங்கிகளுடன் அரசாங்கமானது உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டு  2025 இல்  கடன் மூலதன மீள்கொடுப்பனவுக்காக ரூபா 10,000 மில்லியனும்  வட்டிக்கொடுப்பனவுக்காக ரூபா 10,000 மில்லியனுயும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

இக்கடன்களானது அரசாங்கத்தினால் தீர்க்கப்பட்டவுடன்  தொழிற்பாட்டு இலாபத்தன்மை உறுதி செய்வதற்கு ஸ்ரீலங்கன் விமான சேவை முழுமையாக பொறுப்பாகவிருக்கும். இந்நோக்கில் கம்பனியினால் புதிய நடுத்தரகால உபாயத்திட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய இந்நோக்கத்துக்காக ரூபா 20,000 மில்லியன் ஒதுக்கீடு.



*அனர்த்த நிவாரணம்*

அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களுக்கும் நிரந்தர ஊனமுற்றவர்களுக்கும் இழப்பீடாக தற்போது ரூபா 250,000 வழங்கப்படுகின்றது. அதன்படி, இயற்கை பேரழிவுகள் மற்றும் வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்கள் உட்பட அனைத்து காரணிகளாலும் ஏற்படும் மரணம் அல்லது நிரந்தர ஊனம் என்பவற்றுக்காக இந்த இழப்பீட்டுத் தொகையை ரூ.1,000,000 இனை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான குடியிருப்பு நிலையங்களுக்கு, இதுவரை இழப்பீடு வழங்கப்படாத சொத்து சேதங்களுக்காக ரூபா 2.5 மில்லியன் இழப்பீடு ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*உள ஆரோக்கியம்*

மனநலப் பிரச்சினைகள் உள்ள நோயாளிகளுக்கு ஆலோசனை சேவைகளை வயது வந்தவர்களுக்கு சுகாதார அமைச்சினூடாகவும் பாடசாலை மாணவர்களுக்கு  கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் விரிவுபடுத்தவும் வசதிகளை மேம்படுத்தவும் ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு.

*உதவிச் சாதனங்களை உள்ளூரில் உற்பத்தி செய்தல்*

மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிச் சாதனங்களின் உள்ளூர் உற்பத்தி வசதிகளை  அனைத்து மாகாணங்களிலும் விரிவுபடுத்துவதற்கான முழுமையான நிகழ்ச்சித்திட்டமொன்றின்  தேவை உணரப்பட்டுள்ளது. எனவே, 2025ஆம் ஆண்டில் இந்நோக்கத்துக்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் லங்கா சதொச நிறுவனத்தின் ஊடாக அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பருப்பு, வெங்காயம், கிழங்கு மற்றும் கருவாடு உள்ளடங்கிய உலருணவுப்பொதியொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு.

**17. புலம்பெயர் தொழிலாளர்கள்**

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டின் அபிவிருத்தியில் முக்கியமானதொரு பங்கை வகிக்கின்றனர். இது வெளிநாட்டு மாற்றல்கள் மற்றும் அவர்கள் திரும்பி வரும்போது அவர்கள் நாட்டுக்கு கொண்டு வருகின்ற திறன்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும்.  இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பும் போது மேலும் தாராளமான தீர்வையற்ற கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழிவு.

**21. பொதுப்போக்குவரத்துத் துறையை நவீனமயமாக்கல்**

புதிய தொழில்நுட்பங்களுடன் தற்போதுள்ள பொதுப் போக்குவரத்து முறைமைகளை மேம்படுத்துவதும் குறிப்பாக நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய புதிய போக்குவரத்து முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும். அதன்படி, வீதி மற்றும் புகையிரதப் போக்குவரத்து முறைகளை மேம்படுத்துவதும் நவீனமயமாக்குவதும் காலத்தின் கட்டாயமாகும்.

*பொதுப் போக்குவரத்துத்துறையை நவீனமயமாக்கல்*

பொதுத்துறை போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான ஆரம்பக்கட்டமாக முன்னோடி அடிப்படையில், தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட நவீன மற்றும் வசதியான பஸ்களின் தொகுதி அறிமுகப்படுத்தப்படும். அதன்படி, கொழும்பு பெருநகரப் பகுதிக்குள் மூன்று முக்கிய சாலை வழித்தடங்களில் 100 ஏர்-சஸ்பென்ஷன், தாழ்தள, வசதியான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். 100 தாழ்தள பஸ்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடுசெய்ய நாம் முன்மொழிகிறோம். இதற்கு மேலதிகமாக இலங்கை போக்குவரத்து சபையானது தனது சொந்த நிதியில் 200 தாழ்தள பிரயாணிகள் பஸ்களை தனது பஸ் தொகுதிக்குள் சேர்த்துக் கொள்ளும்.

*ரயில் சேவையை நவீனமயமாக்கல்*

உள்நாட்டுக்குள்ளே புதிய ரயில் பெட்டிகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்புச் செய்வதில் கவனம் செலுத்தி ரயில் முறைமையை ஒரு கைத்தொழிலாக உருவாக்குவது முக்கியமானதாகும்.

அதன்படி, முதல் கட்டமாக, சேவைகளின் செயற்றிறனை மேம்படுத்தவும் அதிகரித்து வரும் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யவும் 200 பயணிப் பெட்டிகளை மறுசீரமைக்கும் நோக்கில் பழைய ரயில் பயணிப் பெட்டிகளை மறுசீரமைக்க ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

மேலும், நாட்டில் புதிய பயணி ரயில் பெட்டிகளின் தேவையை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு புதிய ரயில் பெட்டிகளின் நிர்மாணிப்பணிகளை ஆரம்பிப்பதற்கு ரயில்வே திணைக்களத்துக்கு 2025ஆம் ஆண்டுக்கு ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு.

வினைத்திறனான ரயில் சேவையை வழங்குதல் மற்றும் பொது போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் தற்போது அவிசாவளை வரை செயற்பட்டு

*வீதி உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்*

வளர்ச்சி குன்றிய கிராமங்கள், சுற்றுலா தலங்கள், தொழிற்பேட்டைகள் மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் / பகுதிகளை இணைக்கும் வீதிகளுக்கு முன்னுரிமை அளித்து, கிராமிய வீதிகளை மேம்படுத்துவதற்கும் புனரமைப்பதற்கும் ஏற்கனவே நாடுபூராகவும் கிராமிய வீதிகளை அபிவிருத்திசெய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 26,680 மில்லியனுக்கு மேலதிகமாக  ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடு.

அனைத்து வீதிப்பாவனையாளர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக கிராமிய பாலங்களை புனரமைப்பதற்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 1,000 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு.

*வட மாகாணத்தில் உள்ள கிராமிய வீதிகள் மற்றும் பாலங்கள்*

வட மாகாணமானது எமது பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய அளப்பரிய ஆற்றலை கொண்டுள்ளது. அதனடிப்படையில் அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வடமாகாணத்தில் கிராமிய வீதிகள் மற்றும் பாலங்களை மேம்படுத்துவதற்காக ரூபா 5,000 ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

*முல்லைத்தீவில் வட்டுவாகல் பால நிர்மாணம்*

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்றவாறு ஒரு பாலத்தை நிர்மாணிக்க முன்மொழிகிறேன். அதற்கிணங்க அக்கட்டுமான வேலைகளை ஆரம்பிக்க இவ் வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு.

**22. பிராந்திய அபிவிருத்தி**

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ரூபா 10 மில்லியன் 2025 இல் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டமாக பயன்படுத்துவதற்கு ஒதுக்கப்படும். இதற்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ரூபா 11,250 மில்லியன் வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 2,250 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன். எஞ்சியுள்ள ரூபா 9,000 மில்லியன் அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும்.

**23. மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வருடாந்தம் வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்கமானது பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டாலும் பல மாவட்டங்களில் தொடர்ந்தும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலுள்ளன. உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்த வினைத்திறனான சேவை வழங்கல், வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல், நிறுவக ரீதியாக மேம்பாடு ஆகியவற்றில் தொடர்புபட்டதாக இருக்கலாம். உள்ளடக்கிய நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் வேளையில் மேற்கூறப்பட்ட இடைவெளிகள் மற்றும் புதிதாக தோற்றம் பெற்றுள்ள மாவட்டங்களின் தேவைகளும் தீர்க்கப்படல் வேண்டும். மாவட்ட மட்டத்தில் மேற்கூறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 2025 வரவு-செலவுத் திட்டத்தில் ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீடு.

**24. கிழக்கு மாகாண அபிவிருத்தி**

கிழக்கு மாகாணம் பொருளாதார அபிவிருத்திக்கான பெரும் சாத்தியக்கூறுகளைக் கொண்ட மாகாணங்களில் ஒன்றாகும். எனவே கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலா மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய துறைகளில் முக்கியமாக கவனம் செலுத்தி, உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கும் வகையில், இந்திய பல்துறை மானிய உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் விரிவான அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் முன்மொழிகிறோம்.

**25. மலையக தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கை தேசத்தின் ஒரு அங்கமான மலையக மக்கள் நீண்ட காலமாக அதிக சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும், இந்த சமூகத்தின் வாழ்வாதாரங்கள் இன்னும் ஒரு சிறந்த வாழ்க்கைக்கான தரத்தை விடக் குறைவாகவே உள்ளது.

அதன்படி, பின்வரும் முன்னெடுப்புகளை ஆதரிக்க ரூபா 7,583 மில்லியன் ஒதுக்கீடு.

i.பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 4,267 மில்லியன் ஒதுக்கீடு.

ii.மலையக தமிழ் இளைஞர்களின் தொழில் பயிற்சி, வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 2,450 மில்லியன் ஒதுக்கீடு.

iii.மலையக தமிழ் சமூகத்தின் பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கு ரூபா 866 மில்லியன் ஒதுக்கீடு.

**26.கைத்தொழில் அபிவிருத்தி**

இரசாயனப் பொருள் உற்பத்திக்கான பிரத்தியேகமான கைத்தொழில் பேட்டை காங்கேசன்துறை மாங்குளம், புத்தளம் மற்றும் காலி போன்ற இடங்களில் 05 கைத்தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும். அதற்கென ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு.

வாகன மற்றும் இறப்பர் உற்பத்திக்கு தனியான கைத்தொழில் பேட்டை, வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திக்காக தனியான ஒரு தொழிற்பேட்டையை நிறுவ முன்மொழியப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் கைத்தொழில் அமைச்சின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடு.

**27. கிளீன் ஸ்ரீ லங்கா**

எமது நாட்டின் மக்கள் தொகையில் கணிசமான சதவீதத்தைக் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வசதிகளை உருவாக்குதல், முச்சக்கர வண்டிகள், டாக்சி ஓட்டுநர்கள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் போன்ற வசதியாளர்களின் நெறிமுறைகள் மற்றும் திறனை மேம்படுத்துதல், புராதன அடையாளத்துடன் புராதன பாரம்பரியம் கொண்ட தெரிவுசெய்யப்பட்ட நகரங்களை புனரமைத்தல், குறைந்த வசதிகள் கொண்ட தெரிவு செய்யப்பட்ட மாகாண பாடசாலைகளுக்கு கட்டிடங்களை புனரமைத்தல், பாடசாலை உபகரணங்களை புனரமைத்தல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், முன் குழந்தை பருவ வளர்ச்சிக்கு தனியார் துறையின் பங்களிப்போடு உயர்தர கற்றல் சூழலை உருவாக்குதல், நகர்ப்புறங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், வீதிப் பாதுகாப்பை ஊக்குவித்தல், போதைப்பொருள் தடுப்பு, தெருவிளக்குகளை நிர்வகித்தல், திண்மக் கழிவு முகாமைத்துவம், கடற்கரையை கவர்ச்சிகரமானதாகவும் சுற்றுச்சூழலுக்கு நிலையானதாகவும் மாற்றுதல், நீர்நிலைகளை பாதுகாத்தல் மற்றும் ஆறுகளில் நீரின் தரத்தை மேம்படுத்துதல், பொதுச் சேவையை வினைத்திறனாக்குதல், உயர் வளப்பயன்பாட்டை உருவாக்குதல், துடிப்பான பொதுச் சேவையைக் கட்டியெழுப்புதல் மற்றும் தூய்மையான இலங்கைக் கருத்துருக்களை ஊக்குவித்தல் மற்றும் பரப்புதல் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்த நோக்கத்துக்காக, 2025ஆம் ஆண்டுக்கான அரச வரவு-செலவுத் திட்டத்தில் நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்புடன் 5000 மில்லியன் ஒதுக்கீடு.

(11ஆம் பக்கம் பார்க்க)

# காணி விடுவிப்பு குறித்து பிரதமரோடு கலந்துரையாட சந்தர்ப்பம் தருவதாக அழைத்து ஏமாற்றப்பட்டோம்!

## கேப்பாபுலவு காணி உரிமையாளர்கள் ஆதங்கம்

(கே.குமணன்)

முல்லைத்தீவுக்கு வருகைதந்த பிரதமருடன் கலந்துரையாட சந்தர்ப்பம் தருவதாக தெரிவித்து தாங்கள் ஏமாற்றப்பட்டதாக கேப்பாபுலவு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மக்கள் சந்திப்புக்காக நேற்று முன்தினம் (16) விஜயம் மேற்கொண்ட பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் கலந்துரையாடுவதற்கும் தமது காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளமை தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு காணிகளை விடுவித்துத் தருமாறும் கலந்துரையாடவிருந்ததாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி கேப்பாபுலவு பூர்வீக மக்களுக்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஊடாக நேரம் ஒதுக்கித் தருவதாக உத்தரவாதம் வழங்கப்பட்டு, பிரதமரின் நிகழ்வுக்க வருகை தருமாறு தொலைபேசி மூலம் அமைச்சரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாக சந்திப்புக்கு அழைக்கப்பட்டு ஏமாற்றப்பட்ட கேப்பாபுலவு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கேப்பாபுலவு மக்கள் அதற்கமைவாக நேற்று முன்தினம் (16) ஒரு மணிக்கு வருகை தருமாறும்



பிரதமரோடு கலந்துரையாடுவதற்கு நேரம் தருவதாகவும் தெரிவிக்கப்பட்ட பின்னர் பிரதமர் நிகழ்வுக்கு வருகை தந்து மக்கள் முன்னிலையில் உரையாற்றியபோதிலும் தமது காணிகள் விடுவிப்பு தொடர்பில் ஒரு வார்த்தை கூட வாய்த் திறக்கவில்லை என இராணுவத்தின் பிடியில் உள்ள கேப்பாபுலவு காணி உரிமையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

அத்தோடு கடந்த தேர்தல்களில் தமது வீடு வாசற்படிகளில் ஏறி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாக்களிக்குமாறு வாக்கு சேகரித்த முல்லைத்தீவைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தி அரசின் மாவட்ட அமைப்பாளரோ அல்லது தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட தமது காணி விடயம் தொடர்பில் ஒரு வார்த்தைகூட பேசாது அபிவிருத்தி தொடர்பில் உரையாற்றிவிட்டு தம்மை ஏமாற்றியதாகவும் கேப்பாபுலவு மக்கள் ஊடக சந்திப்பின் வாயிலாக குற்றம்சாட்டியுள்ளனர்.

பிரதமருக்கு முன்பாக தாம் அமர்ந்திருந்த போதிலும் பிரதமரிடம் காணி தொடர்பில் கேள்வி எழுப்பி, காணி விடுவிப்பு தொடர்பில் கோரிக்கை வைக்க எழுந்து கதைக்க முற்பட்டபோது பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகளால் பிரதமர் முன்பாகவே தான் தடுக்கப்பட்டதாக இராணுவ பிடியில் உள்ள கேப்பாபுலவு காணி உரிமையாளர்களில் ஒருவரான விவேகானந்தன் இந்திராதேவி குற்றம்சாட்டியுள்ளார்.

இந்நிலையில், தாம் ஏற்கனவே பாராளுமன்ற தேர்தல் காலத்தில் புதுக்குடியிருப்புக்கு வருகை தந்த பிரதமரிடம் தனது காணி விடுவிப்பு தொடர்பில் மனுக்களை கையளித்ததாகவும் இது தொடர்பில் நேரடியாக கலந்துரையாடுவதற்கு வருகை தந்தபோதும் கலந்துரையாடலில் தமக்கு நேரம் வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

# ஹாலி-எலயில் 6,500 மில்லியன் ரூபா பெறுமதியான குடிநீர் வழங்கல் திட்டம்



பண்டாரவளை பாரிய நீர்ப்பாசனத் திட்டத்திலிருந்து முதலாம் கட்டமாக ஹாலி-எல, குருகுதய பிரதேசத்தில் 10,000 கன மீற்றர் கொள்ளளவுடனான சுத்திகரிப்பு கட்டமைப்புக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தலைமையில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்றது.

பண்டாரவளை, தியத்தலாவை, ஹப்புத்தளை, ஹாலி-எல மற்றும் எல்ல போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உமா ஓயாத் திட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இத்திட்டம் பண்டாரவளை, ஹப்புத்தளை, தியத்தலாவை, எல்ல மற்றும் ஹாலி-எல போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளின் 64 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக செயற்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்துக்காக 9500 மில்லியன் ரூபா நிதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் பரிசளிப்பும் சஞ்சிகை வெளியீடும்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொழும்பு பொது நூலகத்தின் வெள்ளவத்தை பீட்டர்சன் கிளை நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் 'வெள்ளவத்தை சரஸ்வதி நாதம்' சஞ்சிகை வெளியீடும் நாளை (19) பிற்பகல் 2.30 மணிக்கு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வெள்ளவத்தை பீட்டர்சன் கிளை நூலகர் திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பொது நூலக பிரதம நூலகர் திருமதி வருணி கங்கபட ஆரச்சி, சிறப்பு அதிதிகளாக பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்ரியா முனாஸ் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி அனந்தி சிவஞானசுந்தரம் மற்றும் கௌரவ அதிதியாக வெள்ளவத்தை பீட்டர்சன் கிளை பொறுப்பாளர் யுசாந்த கம்மன்பில ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வெளியிடப்படும் சஞ்சிகையின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொள்வார்.

# கசிப்புடன் சந்தேக நபர் கைது





(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம், பதவிய பகுதியில் பெருந்தொகையான கசிப்புடன் சந்தேக நபர் ஒருவரை பதவிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (16) பதவிய பொலிஸ் பிரிவின் மைத்ரிபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதுடன், கசிப்பு மற்றும் அதனை உற்பத்திசெய்வதற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் பதவிய பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 35 வயதுடைய பதவிய பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் மிக நீண்ட நாட்களாக கசிப்பை உற்பத்திசெய்து பதவிய உள்ளிட்ட பகுதிகளுக்கு விநியோகித்து வந்துள்ளமை பொலிஸார் நடத்திய மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதவிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் கெப்பித்திகொள்ளாவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.





ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் இலவசமாக மடி கணினி வழங்கும் 09 ஆம் கட்ட விநியோகம் நேற்றுமுன்தினம் (16) கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் இடம்பெற்றது.இதன்போது எம்.எஸ்.எப்.சுமையா-கந்தப்பொல , எம்.என்.எப். அஸ்ஸா-திஹாரிய, கே.டி.ஆர்.ஷெஹானி பெரேரா -கொழும்பு-05 மற்றும் ரி.தௌஹீதா-புதிய காத்தான்குடி ஆகியோர் புரவலர் ஹாஷிம் உமரிடமிருந்து மடி கணினிகளைப் பெற்றுக்கொண்டனர்.

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; சந்தேகநபருக்கு உதவிய பொலிஸ் அதிகாரி – மனைவி கைது

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தமைக்காக உப பொலிஸ் அதிகாரி ஒருவரும் அவரது மனைவியும் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் ஹக்மன பகுதியில் வசிப்பவர் என்பதுடன், அம்பலாந்தோட்டை பகுதியில் அவர் கைதுசெய்யப்பட்டார். கடந்த ஜனவரி 22ஆம் திகதி கொக்கலவில் உள்ள வாவி ஒன்றுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றது. குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தோல்வியடைந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் தேடப்பட்டு வந்த சந்தேகநபருக்கு அடைக்கலம் கொடுத்ததாக நேற்று முன்தினம் (16) உப பொலிஸ் பரிசோதகரும் அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுசந்த கடமைகளைப் பொறுப்பேற்றார்



(பு.கஜிந்தன்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக வீ.ஏ.ஏ.டி.சுசந்த நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் நேற்று (17) காலை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்றுக்கொண்ட வீ.ஏ.ஏ.டி.சுசந்தவை பொது அமைப்புகளின் தலைவர்கள் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.

# தற்கொலைக்கு முயன்ற சிறைக்கைதி சிகிச்சைப் பலனின்றி உயிரிழப்பு

(அநுராதபுரம் நிருபர்)

போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதியொருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை (17) இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இராஜாங்கனை யாய 05 பகுதியைச் சேர்ந்த சிறைக் கைதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த சிறைக்கைதி கடந்த 13ஆம் திகதி போதைப்பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் தம்புத்தேகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (16) அநுராதபுரம் சிறைச்சாலையின் சிறைக்கூட கழிவறைக்குள் சென்று துணியொன்றினால் கழுத்தை இறுக்கி தற்கொலை செய்வதற்கு முயற்சித்தபோது சக சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களது உதவியுடன் காப்பாற்றப்பட்டு சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பணியாளர்கள் சிறப்பு விருது வழங்கும் விழா

## பேராதனை பல்கலையில் ஏற்பாடு

(எம்.ஏ.அமீனுல்லா)

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மனித வள அபிவிருத்திப் பிரிவு (HRDU) பல்கலைக்கழக சேவைக்காக அர்ப்பணித்த ஊழியர்களைப் பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட பணியாளர்கள் சிறப்பு விருது வழங்கும் விழா இன்று (18) பிற்பகல் 01.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் SCE கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இங்கு, சுமார் 2000 கல்வி சாரா நிர்வாக சாரா ஊழியர்கள் விருதுபெற்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (17.02.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 183.5024 | 192.9210 |
| கனேடியன் டொலர் | 204.3533 | 213.0748 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3647 | 41.9308 |
| யூரோ | 304.1070 | 316.6652 |
| ஜப்பான் யென் | 1.9124 | 1.9882 |
| சிங்கப்பூர் டொலர் | 215.8604 | 225.7732 |
| ஸ்ரேலிங் பவுன் | 365.3845 | 379.3260 |
| சுவிஸ் பிராங் | 320.8591 | 336.2032 |
| ஐ.அ. டொலர் | 291.3447 | 299.9921 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 784.0683 |
| குவைட் | குவைட் தினார் | 957.8427 |
| ஓமான் | ஓமான் றியால் | 767.5728 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0585 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.7925 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.4572 |

# 'பிடியளவு கமநிலத்துக்கு' தேசிய வேலைத்திட்டம் வவுனியாவில் ஆரம்பம்



(சிவகுமார் திவியா)

'பிடியளவு கமநிலத்துக்கு' எனும் தேசிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (16) வவுனியாவில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

'பிடியளவு கமநிலத்துக்கு' எனும் தேசிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியிலுள்ள கமநல சேவை நிலையங்களில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதற்கமைவாக வவுனியா கோயில்குளம் கமநல சேவை நிலையத்திலும் இந்நிகழ்வு இடம்பெற்றது. பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாதிருக்கின்ற சகல வயல் மற்றும் மேட்டுநில காணிகளையும் வினைத்திறனுடன் துரிதமாக பயிரிடல் என்ற நோக்கை அடிப்படையாகக்கொண்டு இவ்வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வவுனியா, கோயில்குளம் கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட கமக்காரர்களுக்கு பிடியளவு கமநிலத்துக்கு என்ற வேலைத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பயிரிடாது இருக்கும் வயல்காணிகளை பார்வையிட்டதுடன், சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்குத் தெளிவூட்டலும் வழங்கப்பட்டது.

இதன் பின்னர் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் பேரணியாக கமநல சேவை திணைக்களத்திலிருந்து ஹொரவப்பொத்தானை வீதி வழியாக பண்டாரிக்குளம் வரை சென்று அங்கு பயிரிடாத நிலங்களைப் பார்வையிட்ட பின் பட்டாணிச்சூர் வழியாக மீண்டும் கமநல சேவை நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்நிகழ்வில் அதிதியாக வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விமலரூபன், உதவி அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தொழிலாளர்களுக்கு செலுத்தவேண்டிய ETF, EPF இன்னும் நிலுவையில்

## இலங்கை பெருந்தோட்ட சேவை சங்கச் செயலாளர் தெரிவிப்பு

(ஜே.எம்.ஹாபீஸ்)

நாட்டிலுள்ள மூன்று பிரதான அரச தோட்டக் கம்பனிகள் கடந்த 25 வருடங்களாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் செலுத்தாது 500 கோடி ரூபா நிலுவையில் இருப்பதாக இலங்கை பெருந்தோட்ட சேவைச் சங்கம் தெரிவிக்கிறது.

கண்டியில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அச்சங்கத்தின் செயலாளர் சத்துர சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கண்டி, மாத்தளை மாவட்டங்களிலுள்ள அரச பெருந்தோட்டக் கம்பனிகள் பலவற்றில் 2001ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தீர்க்கப்படாத அநேக பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றைத் தீர்த்துவைக்க தொழிலாளர் சார்பாக தற்போதைய அரச ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச பெருந்தோட்ட யாக்கம், மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், எல்கடுவ பிளாண்டேஷன் போன்றவை தொழிலாளர்களது சம்பளத்திலிருந்து அறவிட்ட பாரியளவு தொகைப் பணம் வழங்கப்படாது இன்னும் பாக்கியாக உள்ளது. இது பற்றி 2001ஆம் ஆண்டு முதல் பதவிக்கு வந்த சகல அரசுகளுடனும் நாம் பேச்சு வார்த்தை நடத்தினோம். ஆனால், எதுவித பலனும் கிட்டவில்லை. அதில் சில தொழிலாளர்கள் தற்போது மரணித்தும் விட்டனர். அவர்களது சந்ததிகளுக்காவது இதனைப் பெற்றுக்கொள்ள இதுவரை வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. எனவே, அவை உரியவர்களுக்கு கிடைக்க வழிசெய்ய வேண்டுமென வேண்டுகிறோம்''- என்றார்.



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் மார்ச் 12ஆம் திகதி நடைபெறவுள்ள வருடாந்த தேர்த் திருவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகள் தேவஸ்தானத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று (17) தேவஸ்தானத்தில் இடம்பெற்றது. இதன்போது தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் விக்னேஸ்வரன் சர்வானந்த உட்பட அதன் அங்கத்தவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.
(யட்டவத்த செய்தியாளர்)

## பஸ் – வேன் மோதி விபத்து

### 12 பேர் காயம்

(ராமு தனராஜா)

பதுளை கந்தகெட்டிய வீதி போபிட்டியவில் நேற்று (17) காலை தனியார் பஸ் ஒன்றும் ஆடைத் தொழிற்சாலையின் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற வேன் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்துள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கந்தகெட்டிய பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 07 பேர் மேலதிக சிகிச்சைக்காக மஹியங்கனை ஆரம்ப வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் கந்தகெட்டிய வைத்தியசாலையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் வெவேதென்ன மற்றும் போபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களெனவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கந்தகெட்டிய பொலிஸார் குறிப்பிட்டனர்.

# உலக உணவு தினத்தை முன்னிட்டு நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைப்பு

(யட்டவத்த செய்தியாளர்)

உலக உணவு தினத்தை முன்னிட்டு மாத்தளை மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்துக்கு உலக வங்கி 37 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக மாத்தளை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் அனுரந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்துக்கமைய இம்மாவட்டத்தில் தம்புள்ளை, கலேவல, அம்பன்கஹகோரல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட சிறிய குளங்கள் மற்றும் கால்வாய்கள் போன்றவை புனரமைக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் உலக உணவுத் திட்டத்தால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் கிளிநொச்சி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பெருங்குடல், கல்லீரல் பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும் இயந்திரம் பழுது

## நோயாளர்கள் சிரமம்

(ஜே.எம்.ஹாபீஸ்)

பெருங்குடல் பரிசோதனை மற்றும் கல்லீரல் பரிசோதனைக்கு உபயோகப்படுத்தும் இயந்திரங்கள் பழுதடைந்துள்ள நிலையில், பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதாவது மேற்படி பரிசோதனைகளுக்கு பயன்படுத்தப்படும் கொலனஸ் கோபி, என்டெஸ்கோபி மற்றும் ஈ.ஆர்.சி.பி. இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் ஈ.ஆர்.சி.பி. இயந்திரம் 04 இருந்ததாகவும் அதில் 03 செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்லீரல் பரிசோதனைகள் கொழும்புக்கு வெளியே பரிசோதனை செய்யும் ஓரிடமாக பேராதனை போதனா வைத்தியசாலை அமைந்துள்ளது. இந்நிலையில், மேற்படி இயந்திரங்கள் செயலிழந்துள்ளதால் குடல் புற்றுநோய் போன்றவற்றைக் கண்டறிவதற்கு முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பரிசோதனைகளை தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்வதாயின் 45,000 ரூபா முதல் 50,000 ரூபாவரை செலவாகுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வியந்திர செயலிழப்பு காரணமாக நோயாளர்களை கண்டி தேசிய வைத்தியசாலைக்கு அனுப்புவதனூடாக அங்கு பெரும் சன நெரிசலும் காலதாமதமும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. எனவே, இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# சிவனொளிபாதமலைக்கு சென்ற பெண் உயிரிழப்பு

(மஸ்கெலியா நிருபர்)

பாணந்துறை பகுதியிலிருந்து சிவனொளிபாதமலைக்கு யாத்தரை சென்ற பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் (16) இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிக்கையில்,

''பாணந்துறை பகுதியிலிருந்து சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற தீபாணி ஹேமமாலி என்ற பெண் நல்லதண்ணி வாகனம் நிறுத்தும் பகுதியில் வைத்து கடும் சுகயீனம் காரணமாக அவசர அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளையில் சிகிச்சை பலனின்றி நேற்று (17) காலை உயிரிழந்துள்ளதாக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை வைத்தியரொருவர் தெரிவித்தார்.

சடலம் வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

# சமையல் எரிவாயுவின் விலை ஏன் குறைக்கப்படவில்லை?

## தேசிய நுகர்வோர் பாதுகாப்பு முன்னணி கேள்வி

(ஜே.எம்.ஹாபீஸ்)

“சமையல் எரிவாயுவின் விலை நீண்டகாலமாக ஏன் குறைக்கப்படவில்லை?” - என தேசிய நுகர்வோர் பாதுகாப்பு முன்னணித் தலைவர் அசேல சம்பத் கேள்வியெழுப்பியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் (16)இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

“முன்னர் அடிக்கடி சமையல் எரிவாயுவின் விலைகள் மீளாய்வு செய்யப்பட்டன. அதன்படி, அதன் விலை ஒரு சிறிய தொகையிலாவது குறைக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை குறைந்துள்ளபோதும் இங்கு அது குறைக்கப்படவில்லை. இது ஏன் எனக் கேட்க விரும்புகிறோம்.

நான் இன்று நேற்று வெளியே வந்து கூச்சலிடுபவன் அல்ல. நான் நீண்டகாலமாக நுகர்வோர் சார்பாகக் குரல் கொடுத்து வருகிறேன்.

தற்போது வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் நட்டம் தொடர்பில் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான பௌதீக வளம் மற்றும் மானிட வளம் என்பன உள்ளன. எனவே, அவற்றை உடன் நடைமுறைப்படுத்த வேண்டியதுதானே. ஆனால், அது இன்னும் ஏன் நடைமுறைக்கு வரவில்லை?

காய்கறி விலையேற்றத்தைக் குறைக்க அரசு எதுவித திட்டங்களையும் முன்னெடுக்க வில்லை. தக்காளியின் விலை குறைந்துள்ள நிலையில் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கத் திட்டம் தேவை. அதனையும் அரசு மேற்கொள்ளவில்லை.

தற்போது அரச நெற் களஞ்சியசாலைகள் காலியாகக் காணப்படுகின்றன. தனியார் துறையினர் நெல்லைப் பதுக்கி வைத்திருக்கின்றனர். அதனால் எதிர்காலத்தில் அவர்கள் குறிப்பிடும் விலைக்கே நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டிவரும். அப்போது அரிசி விலை உயரும்.

மின் துண்டிப்பின் பின்னணியில் பாரிய சதித் திட்டம் காணப்படுகின்றது. தனியார் கம்பனிகளின் சூரிய மின் கள விற்பனையை ஊக்குவிக்க ஒருசிலர் துணைபோவதே இதற்குக் காரணமாகும். தற்போது நுரைச்சோலையிலுள்ள இயந்திரங்கள் இயங்காத காரணத்தால் நீர்மின் உற்பத்தியை அதிகரித்துள்ளனர். இதன் காரணமாக அடுத்த ஏப்ரல் மாதமாகும்போது நீர்த்தேக்கங்கள் யாவும் நீரின்றி வற்றி விடும். அப்போது மின்சாரத்துக்கு தட்டுப்பாடு ஏற்படும். அப்போது தனியார் மின் உற்பத்தியாளர்களது உற்பத்திகளை நாட வேண்டி வரும். இதற்கான சதியே தற்போது நடக்கிறது.



கடந்தகால அரகலய போராட்டத்தின்போது வழங்கப்பட்ட நட்டஈடு தொடர்பாக பெரிதாகப் பேசப்படுகிறது. இதற்குத் திட்டமிட்டவர்கள் யார், அதற்கு எப்படி நட்ட ஈடு வழங்கப்பட்டது? இவை அனைத்தையும் தேடிப்பார்க்க வேண்டும். இதற்கான ஆணைக்குழுவொன்று ஏற்படுத்தப்பட வேண்டும்” - என்றார்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான வைத்திய சேவை பாதிப்பு

(ஜோசப் நயன்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய விசேட வைத்திய நிபுணர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பணியிலிருந்து விலகியுள்ளமையால் குழந்தைகளும் சிறுவர்களும் உரிய வைத்திய சேவையைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் குழந்தை நல விசேட வைத்திய நிபுணர் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த வைத்திய நிபுணர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பணியிலிருந்து விலகியுள்ளார். இதனால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான நோயாளர் விடுதி இலக்கம்-7இல் சேர்க்கப்பட்ட சிறுவர்களை சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அல்லது வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





எனவே இவ்விடயத்தில் வடமாகாண ஆளுநர் உடனடியாகத் தலையிட்டு குறித்த வைத்திய நிபுணருக்குப் பதிலாக ஒருவரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஆஸாத் எம்.ஹனிபாவை தொடர்புகொண்டு வினவியபோது,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த குழந்தைநல விசேட வைத்திய நிபுணர் திடீரென கடமைக்கு சமுகமளிக்காதிருந்தார். அவர் தொடர்ச்சியாக கடமைக்கு வருகை தராத நிலையில் அவருடன் தொடர்பை ஏற்படுத்தினோம்.

எனினும் தான் வெளிநாடு செல்லவுள்ளதாகவும் இதனால் கடமைக்கு சமுகமளிக்கவில்லையெனவும் வட்ஸ்அப் ஊடாக கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக நாங்கள் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம்.

இந்நிலையில் தற்காலிகமாக வவுனியாவிலிருந்து ஒரு வைத்திய நிபுணரை கடமைக்கு அமர்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுதானியப் பொங்கல் விழா





(பு.கஜிந்தன்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தைப்பொங்கல் விழாவை ஆண்டுதோறும் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடிவருகிறது.

இச் சிறுதானியப் பொங்கல் விழா இம்முறை ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (16) மாலை மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

வளர்பிறை சனசமூக நிலையத்தின் தலைவர் மு. ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந்தினர்களாகப் பசுமை இயக்கத்தின் கலை, இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை.சரவணன், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த.யுகேஸ், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன், நாவலம்பதி ஞானவைரவர் ஆலயத்தின் தலைவர் இ.ராதா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான உறியடியோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்ற இச் சிறுதானியப் பொங்கல் விழாவில் சாமை மற்றும் வரகு அரிசிப் பொங்கல்களும் குரக்கன் கூழும் பரிமாறப்பட்டன. தமிழர்களின் உணவுப் பண்பாட்டில் சிறுதானியங்கள் அருகிவரும் நிலையில், மீளவும் அவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கிலேயே சிறுதானியப் பொங்கல்விழா தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் எழுச்சிபூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுழிபுரம் மேற்கு கலைமகள் அறநெறிப் பாடசாலை திறந்துவைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சுழிபுரம் மேற்கு கலைமகள் அறநெறிப் பாடசாலை நேற்று முன்தினம் (16) யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகராசா சிறிமோகனனால் திறந்துவைக்கப்பட்டது.

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இதன் ஓர் அங்கமாக சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தால் 50 வயதுக்கு மேற்பட்ட சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும் சனசமூக நிலையத்துக்கான சந்தாபணத்தைச் செலுத்தும் அங்கத்தவர்களுள் சீட்டிழுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது.

மேலும் கலைமகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், பொன்னாலை சந்திர பரத கலாலயத்தின் திருமுறை ஆடல், நாட்டிய நிகழ்வு, அளவையூர் கலைவாணி வில்லிசை குழுவின் திருநீலகண்டர் வரலாறு வில்லிசை, சண் நாடகக் குழுவினரின் முட்டை நகைச்சுவை நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகராசா சிறிமோகனன், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் சுப்பிரமணியம் உதயபாலன், வலி. மேற்கு பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜயரட்ணம் ஜெயராஜன், சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சுழிபுரம் மேற்கு புலம்பெயர்தேச உறவுகள் மற்றும் கிராமத்தவர்களின் நிதிப் பங்களிப்புடன் அறநெறிப் பாடசாலை திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரம் தாக்கி சிறுவன் பலி!

(பு.கஜிந்தன்)

வேலணை, செட்டிபுலம் பகுதியைச் சேர்ந்த 09 வயதுச் சிறுவனொருவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வேலணை, செட்டிபுலம் முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 09 வயதான சந்திரகாசன் கனிஸ்டன் என்ற சிறுவனே குறித்த அனர்த்தத்தில் நேற்று முன்தினம் (16) உயிரிழந்துள்ளார்.

இது குறித்து உறவினர்கள் தெரிவிக்கையில்,

சம்பவம் இடம்பெற்றபோது எவரும் வீட்டில் இல்லை. குறிப்பாக அன்று மாலை குறித்த சிறுவன், அயலிலுள்ள உறவினர் வீட்டுக்குத் தாயார் சென்றிருந்த நிலையில், வீட்டில் தனிமையில் இருந்துள்ளார்.

இதன்போது தொலைக்காட்சி பார்ப்பதற்காக மின் இணைப்பை ஏற்படுத்த சிறுவன் முற்பட்டவேளை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக நம்பப்படுகின்றது.

வீட்டுக்கு உறவினர்கள் வந்தபோது சம்பவத்தை அவதானித்து சிறுவனை சிகிச்சைக்காக வேலணை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஆனாலும் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியிலேயே சிறுவன் உயிரிழந்துள்ளாரென வைத்தியசாலை தகவல்கள் கூறுகின்றன.

இதேநேரம், சிறுவனின் சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# யாழில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெண் உயிரிழப்பு!

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதன்போது விடத்தல்பளை, மிருசுவில் பகுதியைச் சேர்ந்த நடராசலிங்கம் புஸ்பராணி (வயது 67) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த பெண் கடந்த 08 - 11ஆம் திகதி வரை காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் 11ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# 2025 வரவு - செலவுத் திட்டம்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**28. திண்மக்கழிவு முகாமைத்துவம்**

அநுராதபுர போதனா வைத்தியசாலை மற்றும் அதிகரிக்கும் சனத்தொகை என்பவற்றினால் அநுராதபுர நகரத்தில் பொதுவான மற்றும் மருத்துவக் கழிவுகளை முகாமை செய்வது ஒரு சவாலாக உருவாகியுள்ளதோடு அது பொதுச் சுகாதாரத்தையும் மற்றும் சுற்றாடலையும் பாதித்து வருகின்றது. இதனைக் கையாள்வதற்கு கழிவு முகாமை வசதிளை உருவாக்குவதற்கு ரூபா 750 மில்லியன் ஒதுக்கீடு.

**29. யானை - மனித முரண்பாட்டை குறைத்தல் மற்றும் வனப் பாதுகாப்பு முயற்சிகள்**

காட்டு யானைகளினால் ஏற்படுத்தப்படும் மனித உயிரிழப்புகள், சொத்து அழிவு மற்றும் பயிர்சேதங்களை குறைப்பதற்காக ஏறக்குறைய 5,611 கி.மீ. நீளமான மின்சார வேலிகளுடன் சேர்த்து காவல் சாவடிகளை நிர்மாணித்தல், தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஆக்கிரமிப்புச் செடிகளை அகற்றி யானை வாழ்விடங்கள் மேம்படுத்தல், சிறந்த புற்றரை முகாமை மற்றும் நீர்மூலங்களை மேம்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். இச்செயற்பாடுகளுக்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு.

இதற்கு மேலதிகமாக வனஜீவராசிகள் வலய காரியாலயங்கள், பாதுகாப்பு காரியாலயங்கள், பீட் அலுவலகங்கள் உள்ளடங்கலாக 270 அலுவலகங்களின் வாண்மை அபிவிருத்திக்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு.

மேலதிகமாக காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக ரூபா 240 மில்லியன் ஒதுக்கீடு. இது உட்பட யானை - மனித மோதலை குறைப்பதற்காக மொத்தமாக ரூபா 640 மில்லியன் ஒதுக்கீடு.

இதற்கு மேலதிகமாக காடுகளின் இயற்கை மீளுருவாக்க ஊக்குவிப்புக்கும் மற்றும் காடழிப்பைக் கட்டுப்படுத்துவதற்கும் ரூபா 1,050 மில்லியன் ஒதுக்கீடு.

**30. நிலைபேறான நிதியளிப்பு**

காலநிலை மாற்ற முன்னெடுப்புகள் மற்றும் தொடர்புடைய முயற்சிகளுடன் இணைந்த உலகளவில் கிடைக்கக்கூடிய நிலையான நிதி திரட்டுகளை அணுக, சுற்றாடல் அமைச்சானது நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியுடன் ஒருங்கிணைந்து செயற்றபடும்.

**31. நிதிச் சந்தை அபிவிருத்தி**

வங்கி வட்டி வீதங்கள் தொடர்ச்சியாக குறைவடைவதினால் சில்லறை முதலீட்டாளர்களுக்கு சாதாரண இலாபத்தை வழங்கக்கூடிய சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிதிப் பொருட்களின் அணுகலானது மிக முக்கியமானதாகும். அலகு நிதி, முதலீட்டு நிதிகள் மற்றும் ஏனைய கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் சந்தையில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கு முக்கியமானதாக காணப்படும். பயனுள்ள ஒழுங்குபடுத்தல் சூழலுக்கு மத்தியில் உரிய விழிப்புக்கவனம் மற்றும் அவசியமான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் நிதித்துறையானது புதுமை மற்றும் மிகவும் சிக்கலான கொடுக்கல் வாங்கல்களை கண்டறிதல் முக்கியமானதாகும்.

**32. ஆளுகை மறுசீரமைப்பு**

நாட்டின் நிலையான பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக இருக்கக்கூடிய ஊழலை ஒழிப்பது ஒரு கூட்டு முயற்சியாகும். இந்த சூழ்நிலையில் அரசாங்க அதிகாரிகள் மாத்திரமன்றி தனியார் துறையினரும் ஒட்டுமொத்த பிரஜைகளும் முடிவில்லாத ஊழலில் தமது பங்களிப்பை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது சம்பந்தமாக தேவையான சட்ட வரைசட்டகம் மேலும் வலுப்படுத்தப்படும். இலங்கையில் ஆளுகை வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறுதல் என்பவற்றை வலுப்படுத்துவதற்கு, ஊழலுக்கு எதிரான முன்னெடுப்புகளை மேற்கொள்ள சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் அதிகரித்த நிதி மற்றும் ஏனைய ஆதரவுடன் குற்ற வருவாய் சட்டமூலத்தை சட்டமாக்குதலும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சரத்துகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவை மேலும் வலுவூட்டுவதும் துரிதப்படுத்தப்படும். கூட்டாக வரையவும் செயன்முறையைப் பின்பற்றி தற்போது வரைவுக்கட்டத்தில் காணப்படுகின்ற குற்ற வருவாய்கள் சட்டவாக்கத்தை மீளாய்வு செய்து நடைமுறைப்படுத்தல்.

**33. இலங்கை தினம்**

இனக்குழுக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் இலங்கையர்களாக செழித்து வளரவும் தேசிய கலாசார பண்டிகையை ஆரம்பிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். எமது நாட்டுக்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தரக்கூடிய டிசம்பரில் ஆரம்பித்து வைக்கப்படும். அதன் பிரகாரம், இந்த நோக்கத்துக்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு.

**34. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடமைப்பு**

நல்லிணக்க முயற்சிகள் மற்றும் காணிகளை விடுவிப்பதன் மூலம், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். மேலும் மோதலுக்குப் பின்னர் அகதிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மீள்குடியேற்றத்துக்காகத் திரும்பி வருகின்றனர். எவ்வாறாயினும், மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயன்பாடுகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

அதன் பிரகாரம், வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக ஒரு பன்முக மூலோபாயத்தைத் முன்னெடுப்பதற்கு நாங்கள் முன்மொழிகிறோம். 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், இந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வீட்டுவசதித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கும் தற்போதைய தேவையின் அடிப்படையில் வீடற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்குவதற்கும் ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடு.

**35. அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளின் அத்தியாவசிய பராமரிப்பு**

பராமரிப்பு இல்லாமை மற்றும் பயன்பாட்டிலுள்ள குறைபாடுகள் காரணமாக இந்த அடுக்குமாடி குடியிருப்புகளின் பௌதீக நிலை மோசமாக உள்ளது. இந்த சகல கட்டிடங்களினதும் வெளிப்புறத்திலும் விரிசல், சிராய்ப்பு, அரிப்பு மற்றும் நீர் கசிவு போன்ற பல பௌதீக குறைபாடுகள் காணப்படுகின்றன. அதன்பிரகாரம், மத்திய அரசாங்கத்தினால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதிகளின் அத்தியாவசிய பராமரிப்புக்காக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு.

**36. கலைஞர்கள் / ஊடகவியலாளர்களுக்கு வீடமைப்பு**

சீன மக்கள் குடியரசின் உதவியுடன் 1996 வீடுகள் கட்டப்படுகின்றன. அதில் கொட்டாவ, பழத்துருவத்தை பகுதியில் 108 வீட்டு அலகுகளை கொண்ட மாடி வீட்டுத் தொகுதி எமது சமூகத்தின் கலாசார செழுமைக்கு பங்களித்த கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கென ஒதுக்கப்படும்.

**37. குடிநீர் துறை**

நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாரிய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சமூக நீர் வழங்கல் கருத்திட்டங்களை விரைவாக நிறைவுசெய்தல்

பாதுகாப்பான நீர் வழங்களை உறுதி செய்வதன்மூலம் தேசிய முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு பொருளாதார நெருக்கடி மற்றும் குறித்த கடன் வழங்குவோரால் கடன் வசதிகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக நிறைவு செய்தல் தாமதமடைந்த கம்பஹா, அத்தனகலை மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், அளுத்கமை, அலவ்வை மற்றும் பொத்துஹர நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் தம்புத்தேகமை நீர் வழங்கல் கருத்திட்டம் என்பவற்றின் நிறைவு செய்தலை விரைவு படுத்துவதற்கு தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்ள அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரசிறை வாய்ப்பு உள்ளபடி இரு வருட காலப்பகுதியில் ரூபா 41,234 மில்லியன் நிதியளிப்பு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க அரசாங்க பங்கு நிதியாக மேற்கூறிய கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு வசதியளிக்க 2025 தேசிய வரவு-செலவு திட்டத்தின் கீழ் ரூபா 20,000 மில்லியன் ஒதுக்கீடு.

***சமூக நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம்***

விசேடமாக குழாய் நீர் வசதிகள் குறைவான கிராமப்புறங்களில் சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்களின் அவசியத்தை நாம் உணர்கிறோம். இது வடக்குப் பகுதி மற்றும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உள்ளிட்ட நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் உள்ள பாதிப்புகளை ஒழிப்பதன் மூலம் கிராமப்புற வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்த முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்காக சமூக அடிப்படையிலான கிராமப்புற நீர் வழங்கல் திட்டங்களை விஸ்தரிப்பதற்கான அவசியத்தை நான் உணர்ந்துள்ளேன்.

எனவே, 2025ஆம் ஆண்டுக்கான சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளில் ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக நீர் வழங்கல் திட்டங்களை நிறைவு செய்வதற்கும் வடக்கு மாகாணத்தின் மீது விசேட கவனத்துடன் புதிய சமூக நீர் வழங்கல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் முன்மொழிவு.

***கிரிபாவ- எப்பாவல நீர் வழங்கல் திட்டத்தை மீண்டும் தொடங்குதல்***

வட மத்திய மாகாணத்தின் கிரிபாவ மற்றும் எப்பாவல பகுதிக்கு மேற்பரப்பு நீர் ஆதாரங்களிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் கலாவெவவிலிருந்து கலா ஓயா வழியாக நீர் வழங்கப்படும் இராஜாங்கனை குளம் மூலம் குடிநீரை வழங்குவதன் முக்கியத்துவத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்த நோக்கத்துக்காக, கிரிபாவ-எப்பாவல நீர் வழங்கல் திட்டத்தின் ஆரம்பப் பணிகளை மீண்டும் தொடங்குவதற்காக, அந்தப் பகுதிக்கு குழாய் மூலம் நீர் வழங்குவதற்காக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு.

**38. அரச சேவையில் காணப்படும் அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புதல்**

அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களை அரச துறையில் பணிக்கமர்த்தும் கடந்த



கால நடைமுறையை நாம் ஒழித்துள்ளோம். அரசாங்கத்தின் தொலைநோக்குக்கிணங்க, அரசியல் தலையீடின்றி தகைமைகள் மற்றும் திறன்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றம் என்பன மேற்கொள்ளப்படும்.

கொவிட் -19 நோய்த்தொற்று, பொருளாதார வீழ்ச்சி மற்றும் அரசியல் உறுதியின்மை மூலம் தோற்றுவிக்கப்பட்ட சவால்கள் காரணமாக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் அரசதுறை சிரமப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு இவ்வருடத்திலிருந்து கண்டிப்பாக பதவியணி வெற்றிடங்களுக்கு அமைவாக அத்தியாவசிய அரசாங்கத் துறை பதவிகளுக்கு 30,000 ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான உபாய ரீதியான ஆட்சேர்ப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். அதற்கமைய இந்நோக்கத்துக்காக ரூபா 10,000 மில்லியன் ஒதுக்கீடு.

**39. பொதுத்துறை சம்பள அதிகரிப்பு**

வரவு-செலவுத் திட்டத்துக்கு அதிக சுமை ஏற்படுவதை தவிர்க்கும் அதேவேளை திறமை மற்றும் திறன்மிக்க பணியாளர்களை கவர்ந்திழுக்க அரசாங்கத்துக்கு இயலக்கூடிய வகையில் அரசதுறை பணியாளர்களுக்கு கண்ணியமான வாழ்க்கை தரத்தை வழங்குவது அவசியமாகும்.

அதற்கிணங்க, ஆகக் குறைந்த மாதாந்த அடிப்படைச் சம்பளம் ரூபா 24,250 இலிருந்து ரூபா 40,000 வரை 15,750ரூபாவினால் அதிகரிக்கப்படுகின்றது. தற்போதுள்ள இடைக்கால கொடுப்பனவு மற்றும் விசேடகொடுப்பனவு அடிப்படை சம்பளத்தினுள் உள்ளடக்கப்படுவதால் தேறிய சம்பளத்தின் ஆகக் குறைந்த நிகர அதிகரிப்பு ரூபா 8,250 ஆகும். இது அரச துறையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு சம்பள உயர்வை வழங்குமென நான் நம்புகிறேன்.

முன்மொழியப்பட்ட ரூபா 15,750 மாதாந்த அடிப்படை சம்பள அதிகரிப்பானது அதே அடிப்படையில் நீதிச்சேவை, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் முப்படை அதிகாரிகள் ஆகியோருக்கு ஏற்புடையதாகும்.

ரூபா 15,750 ஆகக் குறைந்த மாதாந்த அடிப்படைச் சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக வருடாந்த சம்பள அதிகரிப்பின் பெறுமதியானது 80 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஆகக் குறைந்த வருடாந்த சம்பள அதிகரிப்பு ரூபா 250இலிருந்து ரூபா 450 ஆக அதிகரிக்கும். அனைத்து அரச ஊழியர்களினதும் வருடாந்த சம்பள ஏற்றம் மேற்கூறிய அதே சதவீதத்தால் அதிகரிக்கப்படல் வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது.

இச்சம்பள அதிகரிப்பின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 325 பில்லியனாகும். தற்போதைய அரசிறை வரையறைகளை கருத்திற்கொண்டு இச் சம்பள அதிகரிப்பானது கட்டங்கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். மொத்த தேறிய சம்பள அதிகரிப்பில் ரூபா 5,000 மற்றும் மீதி தொகையில் 30 சதவீதம் 2025 ஏப்ரல் மாதத்திலிருந்து வழங்கப்படும். எஞ்சியுள்ள 70 சதவீதம் சமமான இரு பகுதிகளாக முறையே 2026 ஜனவரி மற்றும் 2027 ஜனவரியில் வழங்கப்படும்.

ஆகவே, இச்சம்பள அதிகரிப்புக்காக 2025இல் ரூபா 110 பில்லியன் ஒதுக்கீடு.

இச்சம்பள அதிகரிப்பின் ஒரு அங்கமாக 2025.01.01ஆம் திகதி அல்லது அதன் பிறகு ஓய்வுபெறும் பணியாளர்களின் ஓய்வூதியமானது அவர்கள் முன்மொழியப்பட்டுள்ள 2025ஆம் ஆண்டு சம்பளத் திட்டத்தின் கீழ் இளைப்பாறுகை நன்மைகளைப் பெறக் கூடிய வகையில் இப்புதிய சம்பள கட்டமைப்பின் கீழ் கணக்கிடப்படும்.

அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படைச் சம்பளத்தின் அதிகரிப்பை கருத்திற்கொண்டு அரச ஊழியர்களின் இடர்கடன் எல்லையானது தற்போதுள்ள ரூபா 250,000 இலிருந்து ரூபா 400,000 ஆக அதிகரிக்கப்படும்.

**40. தனியார்துறை சம்பள அதிகரிப்பு**

தொழில் வழங்குநர் சங்கங்கள், தனியார் துறை தொழிலாளர்களின் தேசிய ஆகக் குறைந்த சம்பளத்தை 2025 ஏப்ரலில் ரூபா 27,000 ஆகவும் 2026 இலிருந்து ரூபா 30,000 ஆகவும் அதிகரிக்க ஏற்கனவே இணங்கியுள்ளன.

**41. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள மீளாய்வு**

பிரதானமாக தேயிலை, இறப்பர், தெங்கு பெருந்தோட்டத்துறையில் ஏறக்குறைய 1.5 மில்லியன் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வாழ்க்கைத்தரமானது மேலும் மேம்படுத்தப்பட வேண்டுமென அரசாங்கம் கருதுகிறது. பெருந்தோட்டத்துறையை நோக்காகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக அவர்களது நாளாந்த வேதனத்தை ரூபா 1,700 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் உறுதியளிக்கிறது.

**42. அரசதுறை ஓய்வூதியங்கள்**

2017.12.31 வரை ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரே சம்பள அளவுத்திட்டத்திலிருப்பதனால் 2020ஆம் ஆண்டுக்குரிய ஐந்தாம் கட்ட சம்பள அளவுத்திட்ட அடிப்படையில் 2016- 2020 வரை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியங்களை மாத்திரம் திருத்துவதன் மூலம் ஓய்வூதிய முரண்பாடு ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதை அவதானிக்கின்றேன்.

இப்பிரச்சினை நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருப்பதனால் தற்போதுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அரசிறை ஏற்பாடுகளுக்குள் கட்டம் கட்டமான விதத்தில் இது தீர்க்கப்பட வேண்டும் என்று நான் நம்புகின்றேன். 2020 ஜனவரி 01 இற்கு முன்னர் 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக 2020ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டங்களுக்கு நேரொத்த விதத்தில் 03 கட்டங்களில் திருத்துவதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

முதலாவது கட்டமாக 2018 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களினதும் ஓய்வூதியங்கள் 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய மூன்றாம் கட்ட சம்பள அளவுத் திட்டங்களுக்கு அமைவாக திருத்தம் செய்யப்படுவதுடன் 2025 ஜுலையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இக் கட்டத்துக்காக 2025 வரவு-செலவுத்திட்டத்தினூடாக ரூபா 10,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறேன்.

மேலும் சம்பள மாற்றத்தின் நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டங்களுடன் தொடர்புடைய ஓய்வூதிய மாற்றங்களை முறையே 2026 ஜுலை 2027 ஜுலை தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கும் நாம் முன்மொழிகின்றோம்.

**43. சட்ட மறுசீரமைப்புகள்**

விரைவான பொருளாதார வளர்ச்சி, நல்லாட்சி மற்றும் பயனுள்ள பொதுச் சேவை வழங்கலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட சிறந்த சட்ட ஏற்பாடுகளை நிறுவுவதற்காக அரசாங்கம் வரும் ஆண்டில் பல சட்ட சீரமைப்புகளை அறிமுகப்படுத்தும். இந்த சட்டங்களில் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் ஆளுகையை மேம்படுத்துவதற்கும் அரசாங்க-தனியார் பங்குடைமைகளுக்கான சட்ட வரைசட்டகம் ஒன்றை உருவாக்குவதற்கும் பெறுகை, அரசாங்க சொத்து முகாமைத்துவம், புள்ளிவிவரங்கள், தரவு பரிமாற்றம், மதிப்பீடு, சொத்து முகாமைத்துவம், நுண் நிதி, கடன், பணமோசடி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி ஆகியவற்றைச் சுற்றியுள்ள ஆளுகையை மேம்படுத்துவதற்குமான சட்டவாக்கம் ஆகியவை உள்ளடங்கும்.

**44. வருமான வழிமுறைகள்**

2025ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 15.1 வீதம் எனும் வருமான இலக்கை இலங்கை அடைந்து கொள்வதை இயலச் செய்யும் வகையில் மேற் கூறப்பட்ட வரிக் கொள்கை செயற்பாடுகள் தேவையான வருமானத்தை ஈட்டித்தருமென எதிர்பார்க்கப்படுகின்றது. உண்மையில் இலங்கையின் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின் வருமான உபாயமானது சமூகத்தில் வலுக்குன்றிய குழுவினருக்கு நிவாரணம் வழங்கும் அதேவேளை வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலம் அரசிறை ஸ்திரத்தன்மையை மேம்படுத்துதல், வரி இணக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் வலுவான கண்காணிப்பு பொறிமுறைகள் மற்றும் பரந்த டிஜிட்டல் மயமாக்கலின் மூலம் நிறுவனத்தை வலுப்படுத்துதல் என்பனவாகும். வரி நிர்வாகத்தில் மனித தொடர்புகளை குறைக்கும் அதேவேளை வருமான இழப்புகளை குறைப்பதற்கும் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்குமாக வரி முறைமைகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

வியாபாரங்களில் விசேடமாக பெறுமதிசேர்வரி பதிவு செய்துள்ள தொழில்முயற்சிகளில் காசில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு மட்டும் டிஜிட்டல் பரிமாற்றத்துக்கு வசதியளிப்பதற்கான ஒரு முக்கிய முன்னெடுப்பாக விற்பனை நிலைய இயந்திரங்கள் (POS) பயன்படுத்துதல். ஒரு காசற்ற பொருளாதாரம் வரிஏய்ப்பினைக் மற்றும் சட்டவிரோத நிதிச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது மட்டுமன்றி இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்குப் பங்களிப்புச் செய்கின்றது.

வருமான முகவராண்மைகளை டிஜிட்டல் மயப்படுத்துவது மற்றும் முழுதான டிஜிட்டல் பொருளாதார முன் நகர்வு வருமான அதிகரிப்பு முயற்சிகளுக்கு குறிப்பிடத்தக்களவு உந்துசக்தியை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் வருமானம் சேகரிக்கும் அதிகாரத்துவங்களின் பொறுப்பு மட்டுமல்ல. ஏனைய பல கணக்காய்வு நிறுவனங்கள் மற்றும் வரிக் கணக்காளர்கள் உட்பட பல பங்குதாரர்களுக்கு அரசாங்கம் வருவாய் இழப்பை எதிர்கொள்ளாமல் இருக்க தமது கடமைகளை சமூகத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் செய்யும் கடப்பாடு உண்டு. இதன்பால் சட்ட மற்றும் ஒழுங்குமுறைச் சட்டகங்களுக்கு இணங்கி நடப்பது உறுதிசெய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2025ஆம் ஆண்டுக்கு அப்பாலும் இலங்கை வருமான இலக்குகளை விஞ்சிச் செல்வதனை இவ் வரி நிர்வாக மற்றும் வரி இணக்க மேம்பாட்டு செயற்பாடுகள் இயலுமாக்கும் என நாம் நம்புகிறோம். அந்த நிலையில் வருமான இலக்குகளை அடைவதை சீர் குலைக்காத மற்றும் நாட்டின் அரசிறை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் வகையிலும் மக்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்க முடியுமாயிருக்கும்.

**45. கடன்பெறு எல்லை**

2025ஆம் நிதியாண்டின் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கான கடன்பெறு எல்லை பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக தொடர்புடைய வருமானம் மற்றும் செலவின நடவடிக்கைகள் பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ளது. மேலும் 2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவ சட்டத்துக்கமைய வரவு-செலவுதிட்ட இரண்டாவது வாசிப்புடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

இன்று நான் கோடிட்டுக் காட்டிய கொள்கைகள், நான் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டதற்கான தொலைநோக்குப் பார்வையைப் பிரதிபலிக்கும் அதேவேளையில், நான் மட்டும் அவற்றை உருவாக்கவில்லை. இந்தக் கொள்கைகள் நம்பமுடியாத முயற்சியின் விளைவாகும். இது ஒரு அமைச்சரவையின் அர்ப்பணிப்பு மற்றும் கூட்டு நடவடிக்கையிலிருந்து பிறந்ததாகும்.

பல ஆண்டுகளாக, இலங்கையில் முதலீடு செய்யத் தூண்டப்பட்டவர்கள், எதையும் சாதிக்க முதலில் இடைத்தரகர்களிடம் முதலீடு செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிந்தனர். அந்த சகாப்தம் முடிந்துவிட்டது. இந்த அரசாங்கத்தில் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரியும் தங்கள் வேலையைச் செய்ததற்காகவோ அல்லது செய்யாததற்காகவோ இலஞ்சம் அல்லது சலுகைகளை நாட மாட்டார்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இருப்பினும், நம்மில் யாராவது சட்டத்தை வளைக்கவோ அல்லது மீறவோ வாய்ப்பில்லாத சூழ்நிலையில், பொறுப்பானவர்கள் விசாரிக்கப்பட்டு சட்டத்தின் முழு அளவுக்கும் வழக்குத் தொடரப்படுவார்கள் என்று என்னால் உறுதியளிக்க முடியும்.

நவீன உலகத்துடன் இலங்கைக்கு இணையாக இதுபோன்ற ஒரு வாய்ப்பு இதற்கு முன்பு கிடைத்ததில்லை.

வரலாற்றில் முதல்முறையாக, வடக்கு முதல் தெற்கு வரை, கிழக்கு முதல் மேற்கு வரை உள்ள இலங்கை மக்கள் அனைவரும் ஒரு பொதுவான நோக்கத்தின் பின்னால் ஒன்றுபட்டுள்ளனர். மதம், இனம், பாலினம், வர்க்கம் மற்றும் வயது ஆகியன இனி ஒருபோதும் நம்மைப் பிரிக்காது. இலங்கை மக்களைப் பற்றி நான் உறுதியளிக்கக்கூடிய ஒரு விடயம் இதுதான். மக்கள் மீண்டும் ஒருபோதும் ஒருவருக்கொருவர் எதிராகப் பிரிக்கப்பட மாட்டார்கள். தங்கள் சொந்த அரசியல் அல்லது தனிப்பட்ட இலாபத்துக்காக நம்மை ஒருவருக்கொருவர் எதிராகத் திருப்ப முயற்சிப்பவர்களால் மக்கள் மீண்டும் ஒருபோதும் ஏமாற்றப்பட மாட்டார்கள்.

இறுதியாக, நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு, குறிப்பாக வரவு-செலவுத் திட்டத்தை இறுதிசெய்வதற்கு வாரக்கணக்கில் அயராது உழைத்த திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, வரவு-செலவுத் திட்டங்களை சரியான நேரத்தில் வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு, திறைசேரியில் உள்ள அதிகாரிகளிடமிருந்து மேலும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

# உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி: சவூதியில் அமெரிக்கா - ரஷ்யா பேச்சு



உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக சவூதி அரேபியாவில் அமெரிக்காவும் ரஷ்யாவும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நேட்டோ அமைப்பில் அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் கனடா உள்ளிட்ட 32 நாடுகள் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளன. இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பைக் காப்பதே தனது நோக்கமென்று நேட்டோ தெரிவித்துள்ளது.

நேட்டோவில் இணைய உக்ரைன் முடிவு செய்த நிலையில், இதனால் தமக்கு ஆபத்து ஏற்படுமென்று கருதிய ரஷ்யா, உக்ரைன் மீது கடந்த 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. இந்தப் போர் தொடங்கி 3 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் இன்று (18) 1,090ஆவது நாளாகவும் போர் தொடர்கிறது.

இந்நிலையில், அந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர, சவூதி அரேபியாவில் அமெரிக்க, ரஷ்ய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கையில், ‘‘உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக சவூதி அரேபியாவில் ரஷ்ய அதிகாரிகளை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ விரைவில் சந்தித்துப் பேசவுள்ளார்.

அவருடன் அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மைக் வோல்ட்ஸ், மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ஸ்ரீவ் விட்காஃப் ஆகியோர் செல்லவுள்ளனர்.

இதுதொடர்பாக உக்ரைனுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் கேத் கெல்லாக், ‘‘சவூதியில் அமெரிக்கா, ரஷ்யா, உக்ரைன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்’’ - என்றார். எனினும், இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க உக்ரைனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையென அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**உக்ரைனில் படைகளை நிறுத்தத் தயாராகும் பிரித்தானியா**

இதேவேளை, ‘‘உக்ரைனில் அமைதியை நிலைநாட்ட, எங்கள் படைகளை அங்கு நிறுத்தி வைப்பதற்குத் தயாராகவுள்ளோம்’’ என்று பிரித்தானிய பிரதமர் கேர் ஸ்டாமர் தெரிவித்தார்.

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் அமைதிப் பேச்சு நடத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பின்றி அமைதிப் பேச்சு மேற்கொள்ள அமெரிக்காவும் ரஷ்யாவும் தயாராகியுள்ளன. இந்தப் பேச்சுவார்த்தை சவூதியில் நடைபெறவுள்ளது.

இதற்கு ஐரோப்பிய நாடுகளை அழைக்காமை குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரோன், பிரித்தானிய பிரதமர் கேர் ஸ்டாமர் உள்ளிட்டோர் கவலை தெரிவித்துள்ளனர். இது குறித்து பிரித்தானிய பிரதமர் கேர் ஸ்டாமர் தெரிவிக்கையில்,

‘‘உக்ரைனின் பாதுகாப்பென்பது, ஐரோப்பாவின் பாதுகாப்பைப் போன்றது. எனவே, உக்ரைனில் அமைதியை நிலைநிறுத்தத் தேவைப்படும் பட்சத்தில் எங்கள் நாட்டுப் படைகளை அங்கு களமிறக்கத் தயாராகவிருக்கிறோம். ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளின் படைகளும் அங்கு களமிறக்கப்படும் பட்சத்தில், மீண்டும் ஒருமுறை உக்ரைனைத் தாக்குவதற்கு புட்டின் தயங்குவார்’’ - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் புயல் - மழை, வெள்ளத்தில் சிக்கி 9 பேர் பலி

## 39,000 வீடுகளில் மின் துண்டிப்பு



அமெரிக்காவை புயல் தாக்கிய நிலையில், பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், மின்துண்டிப்பு காரணமாக 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் சக்தி வாய்ந்த குளிர்கால சூறாவளித் தாக்குதல்கள் அவ்வப்போது ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில், கென்டகி (Kentucky), ஜோர்ஜியா உள்ளிட்ட மாகாணங்களைத் தாக்கிய சூறாவளி, பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர். கென்டகியில் மட்டும் 8 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதுகுறித்து கென்டகி மாகாண ஆளுநர் ஆண்டி பெஷீர் தெரிவிக்கையில்,

கடந்த 24 மணிநேரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர். மற்றவர்களைத் தேடும் மற்றும் மீட்கும் பணியும் இடம்பெற்று வருகின்றது.

சூறாவளியால் டென்னஸ்ஸீ, கென்டகி மற்றும் வேர்ஜீனியா உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் வெள்ளம் ஏற்பட்டு, வாகனங்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன. மரங்கள் வேரோடு சரிந்துள்ளன. வீடுகள், கட்டடங்களை வெள்ளநீர் சூழ்ந்து காணப்படுகிறது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர்.

கென்டகி மாகாணத்தில், வரலாறு காணாத வகையில் வெள்ளத்தின் எதிரொலியாக நீர் மட்டம் உயர்ந்துள்ளதென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது. தொடர்ந்து மாகாணத்துக்கு அவசரநிலை உத்தரவையும் கடந்த சில நாட்களுக்கு முன்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களுக்கு வெள்ளம் தொடரும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

புயல் தொடங்கியதிலிருந்து, மாநிலம் முழுவதும் 1,000 பேர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சில பகுதிகளில் கடுமையான காற்று வீசுவதால் மின் தடைகள் அதிகரிக்கக்கூடுமென பெஷீர் தெரிவித்துள்ளார்.

# அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்காவிட்டால் ஹமாஸ் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு எச்சரிக்கை



‘‘அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்காவிட்டால், ஹமாஸ் அமைப்பினர் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும்’’ - என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக் கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில், கடந்த 15 மாதங்களாக நீடித்து வந்தது. எகிப்து, கட்டார், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தம் செய்ததையடுத்து, இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 42 நாட்களுக்குப் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி, ஒவ்வொரு கட்டமாக பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. அதற்கு ஈடாக, இஸ்ரேல் சிறைகளிலிருந்த பலஸ்தீனியர்கள் விடுதலை செய்யப்பட்டனர். போர் நிறுத்தத்தின்படி, பணயக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்து வருகிறது.

இந்நிலையில், பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்துள்ளதாவது,

‘‘காஸா போர் தொடர்பாக இஸ்ரேலும், அமெரிக்காவும் ஒரு பொது வான உத்தியைக்கொண்டுள்ளன. அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்கா விட்டால், ஹமாஸ் அமைப்பினர் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும்.

காஸாவில் ஹமாஸின் இராணுவத் திறனையும் அதன் அரசியல் ஆட்சியையும் நாங்கள் ஒழிப்போம். எங்கள் அனைத்து பணயக்கைதிகளையும் வீட்டுக்கு அழைத்து வருவோம். காஸா மீண்டும் ஒருபோதும் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக இல்லாமல் இருப்பதை உறுதிசெய்வோம்’’- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டுத் துளிகள்

***கட்டார் நாட்டின் தலைநகர் டோஹாவில் நடைபெற்ற கட்டார் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் லாத்வியாவின் ஜெலினா ஆஸ்டாபென்கோவை 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்திய அமெரிக்காவின் அமண்டா அனிசிமோவா சம்பியன் பட்டம் வென்றார்.***

***************

***பாகிஸ்தானில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்க அணியின் தலைவர் டெம்பா பவுமாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஷகீன் ஷா அப்ரீடிக்கு 25 சதவீத அபராதமும் பவுமா ஆட்டமிழந்ததும் பெவிலியன் செல்லவிடாமல் வழிமறித்த சவுத் ஷகீல், கம்ரன் குலாம் ஆகியோருக்கு 10 சதவீத அபராதமும் ஐ.சி.சியால் விதிக்கப்பட்டது.***

***************

***இங்கிலாந்துடனான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் சதமடித்த சுப்மன் கில் ஒரு குறிப்பிட்ட மைதானத்தில் சர்வதேச கிரிக்கெட்டின் அனைத்து வடிவங்களிலும் சதம் அடித்த 5ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார். இந்தப் பட்டியலில் பாப் டு பிளெஸ்சிஸ் (வாண்டரர்ஸ், ஜோகன்னஸ்பர்க்), டேவிட் வார்னர் (அடிலெய்டு, ஓவல்), பாபர் அசாம் (தேசிய மைதானம், கராச்சி), குயிண்டன் டி காக் (சூப்பர்ஸ்போர்ட் பார்க், சென்சூரியன்), சுப்மன் கில் (நரேந்திர மோடி மைதானம், அஹமதாபாத்) ஆகியோர் உள்ளனர்.***

***************

***இலங்கை அணியுடன் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 107 ஓட்டங்களுக்கு சுருண்டுபோன அவுஸ்திரேலிய அணி, ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் ஆசியாவில் தங்களது குறைந்த ஓட்ட எண்ணிக்கையைப் பதிவுசெய்தது.***

***************

***பிரான்ஸின் மார்சே நகரில் நடைபெற்ற ஓபன் 13 டென்னிஸ் தொடரின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில் பிரான்ஸின் பெஞ்சமின் பொன்சி-ஹ்யூஜஸ் ஹெர்பர்ட் ஜோடி, பெல்ஜியத்தின் சாண்டர் கில்லி-போலந்தின் ஜேன் ஜிலன்ஸ்கி ஜோடியுடன் மோதியது. இதில் சிறப்பாக ஆடிய பிரான்ஸ் ஜோடி 6-3, 6-4 என சம்பியன் பட்டம் வென்று அசத்தியது.***

# 2025 ஐ.பி.எல். தொடரில் முழு போட்டி அட்டவணை வெளியீடு



18ஆவது இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரின் முழு போட்டி அட்டவணை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

10 அணிகள் கலந்துகொள்ளும் இந்தத் தொடர் அடுத்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது. அன்றைய தினம் கொல்கத்தா ஈடன் கார்டனில் இரவு 7.30 மணிக்கு நடக்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை எதிர்கொள்கிறது.

2025 ஐ.பி.எல். தொடரில் லீக் போட்டிகள், ப்ளேஓவ் போட்டிகள் என அனைத்தையும் சேர்ந்து மொத்தமாக 74 போட்டிகள் நடைபெற வுள்ளன. தொடருக்காக மொத்தமாக 13 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ப்ளேஓவ் சுற்றின் குவாலிபயர் 1 போட்டி மே 20ஆம் திகதியும், எலிமினேட்டர் போட்டி மே 21ஆம் திகதியும் ஹைதராபாத்தில் நடைபெறவுள்ளன. குவாலிபயர் 2 போட்டி மே 23ஆம் திகதியும், இறுதிப்போட்டி மே 25ஆம் திகதியும் கொல்கத்தாவில் நடைபெறவுள்ளன.

# சிறுவர் மேம்பாட்டுக்கான விளையாட்டு விழா




*(கல்லடி செய்தியாளர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலக சிறுவர் கழக உறுப்பினர்களின் செயற்றிறனை ஊக்கப்படுத்துவதற்கான விளையாட்டுப் போட்டியானது மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் செரி நிறுவனத்தின் விளையாட்டினூடான விருத்தித் திட்டத்தின் கீழ் ஒரு நாள் விளையாட்டுப் பயிற்சி நிகழ்வானது சிறார்களுக்கு வழங்கப்பட்டது.

14 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 700 சிறுவர் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்ட கிரிக்கெட், கால்பந்து, வலைப்பந்து, கரப்பந்து மற்றும் கரம் ஆகிய விளையாட்டுகள் தொடர்பான பயிற்சிகள், நுட்பங்களை தேசிய ரீதியில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களைக் கொண்டு வழங்கப்பட்டது.

கிராமிய விளையாட்டுகள் தொடர்பான பயிற்சிகளும் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், மட்டக்களப்பு மாவட்ட கல்வி வலயங்களின் விளையாட்டுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ரி.மதிராஜ், செரி நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் வி.தர்ஷன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சம்பியன்ஸ் கிண்ணத்துக்காக சிறப்புத் தூதுவர்கள் நியமனம்

**8 அணிகள் பங்கேற்கும் 9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நாளை புதன்கிழமை பாகிஸ்தானில் ஆரம்பமாகும் நிலையில், தொடரில் சிறப்புத் தூதுவர்களாக பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் சர்பராஸ் அஹ்மட், இந்திய முன்னாள் வீரர் ஷிக்கர் தவான், நியூசிலாந்து முன்னாள் வீரர் டிம் சௌதி, ஆஸி. முன்னாள் வீரர் ஷேன் வொட்சன் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.**

**சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு நியமிக்கப்பட்டுள்ள சிறப்புத் தூதுவர்கள், இரசிகர்களுக்கு சிறந்த அனுவங்களைப் பெற்றுக்கொடுக்கவுள்ளனர்.**

# இலங்கை ரக்பி சங்கத்துக்கு உலக ரக்பி சம்மேளனம் எச்சரிக்கை

SRI LANKA RUGBY
SINCE 1879

இலங்கை ரக்பி சங்கத்தின் நிர்வாகப் பிரச்சினை 4 மாதத்துக்குள் தீர்க்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் சர்வதேச போட்டிகளிலிருந்து வெளியேற்றப்படுவது உட்பட கடுமையான தடைகளை இலங்கை எதிர்கொள்ளவேண்டி இருக்குமெனவும் உலக ரக்பி சம்மேளனம் எச்சரித்துள்ளது.

முக்கிய பங்குதாரர்களாக ஆசிய ரக்பி தலைவர் கயிஸ் அப்துல்லா அல்-தலாய், இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுத் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் மற்றும் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் ஷெமால் பெர்னாண்டோ ஆகியோருக்கு கடந்த 14ஆம் திகதி அனுப்பியிருக்கும் கடிதத்தில், தற்போதைய நிலையின் தீவிரத்தை உலக ரக்பி சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதில் மறுசீரமைக்கப்பட்ட தீர்வாகக் கட்டமைப்பை செயற்படுத்தல், புதிய யாப்பு ஒன்றுக்கு அங்கீகாரம் அளிப்பது மற்றும் எதிர்வரும் ஜூன் 15இற்குள் தேர்தலை நடத்த வேண்டுமென்று இலங்கை ரக்பி சங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

CHAMPIONS TROPHY 2025 • PAKISTAN
ICC
இன்னும் 1 நாள்
பெப்ரவரி 19 முதல் மார்ச் 09 வரை

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7